இதழ்-62

01.08.2023

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்




# கடுமையான தண்டனைகள் தேவை



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி விற்பனைக்காக 1 கிலோ 135 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை கொண்டு சென்ற நாவற்குழி குடும்பஸ்தருக்கு 6 வருடங்களின் பின் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரணதண்டனை வழங்கி சமீபத்தில் தீர்ப்பளித்தார். பலரது வரவேற்பையும் பெற்றுள்ள இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பானது போதைப்பொருளுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

2022 இல் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு,பொலிஸ் நிலையங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட சுற்றி வளைப்புகளையடுத்து ஹெரோயின் 1548 கிலோ கைப்பற்றப்பட்டது. இந்த ஹெரோயின் தொகையுடன் 46,258 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். இந்த புள்ளிவிபரங்களை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவு வெளியிட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 2090 கோடி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. போதைப்பொருளுடனான குற்றச்சாட்டுகளில் அதாவது குறிப்பாக போதைப்பொருள் பாவனையுடனான குற்றச்சாட்டுக்களின்கீழ் 5000 மாணவர்கள் தடுப்பு நிலையங்களில் இருக்கிறார்கள் என மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜெனரல் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். இவர்கள் க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் சித்தி அடைந்தவர்களென்றும் 22 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களெனவும் தெரிவித்துள்ள அவர் இவ்வாறு இளம் தலைமுறையினர் பெரும் எண்ணிக்கையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை நாட்டின் எதிர்காலத்தை சவாலுக்குட்படுத்தியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

1970 தொடக்கம் 1980வரை சிங்கப்பூர் போதைப்பொருள் பாவனை, கடத்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய குற்றங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட போதும் 1973ம் ஆண்டு போதைப் பொருள் தொடர்பான கடுமையான சட்டங்களை அறிமுகப்படுத்தியதை தொடர்ந்து, இன்று போதைப்பொருள் பாவனை மிகவும் குறைந்த நாடாக சிங்கப்பூர் தன்னை நிலைநிறுத்தியுள்ளது. அத்துடன் உலக பொருளாதாரத்திலும் முக்கிய இடம் வகிக்கின்றது. போதைப்பொருள் தொடர்பான

( 4ம் பக்கம் பார்க்க....)

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

தூமி பல்கலை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
வ.டியனி

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் தூமித்துளை...

02 கடுமையான தண்டனைகள் தேவை

05 பழந்தமிழரின் அடையாளம் வேல்

11 விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்

13 யாழில் ஒட்டப்பட்ட விசித்திர சுவரொட்டி

14 வலி சுமந்த பொழுது (சிறுகதை)

22 யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

24 சின்னத்திரையால் சீரழியும் பெண்கள்

28 பாட்டுப் பாடவா..?

29 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உள நன்நிலை

33 மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்

37 நான்காம் கைத்தொழில் புரட்சிக்குள் நுழைந்துவிட்டதா உலகம்?

41 சித்திராங்கதா

45 உலகக் கிண்ண கிரிக்கெட் 2023 - 02

(02ம் பக்க தொடர்ச்சி)
சிங்கப்பூரின் கடுமையான சட்டங்களை மனித உரிமை அமைப்புகள் கண்டித்தாலும் இன்றைய சிங்கப்பூரின் முன்னேற்றமடைந்த பொருளாதார நிலைக்கு இவ்வாறான கடுமையான சட்டங்களே அடித்தளம் இட்டன. அது போன்ற சட்டங்கள் எமது நாட்டிலும் அமுல்ப்படுத்தப்பட்டு, குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட்டால்த்தான் போதைப்பொருளை வேரோடு களைய முடியும்.

குற்றவாளிகளையும் பாதுகாத்து, பொதுமக்களையும் சமரசப்படுத்தும் தீர்ப்புகளால் பயனில்லை. பொதுமக்களின் வரிப்பணத்தில் போதைப்பொருள் கடத்தல் வியாபாரிகள் சிறைச்சாலையில் இருந்துவிட்டு வருவது தடுக்கப்பட வேண்டுமென அண்மையில் பாராளுமன்றத்தில் கூட விவாதிக்கப் பட்டிருக்கிறது. இந்த விவாதங்கள் அப்படியே நீர்த்துப் போகாமல் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்ந்து, போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற குற்றங்களுக்கு, குற்றவாளிகள் அச்சப்படும் வகையில் கடுமையான தண்டனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

*தண்டனைகள் கடுமையானால்த்தான் குற்றங்கள் குறையும்*

# மது அருந்தாதீர்கள்
## என ரசிகர்களிடம் ரஜினி வேண்டுகோள்

என் வாழ்க்கையில் மது இல்லாமல் இருந்திருந்தால் நான் சமூகத்திற்கு நிறைய சேவை செய்திருப்பேன்.
**நான் மது அருந்தியதால் நிறைய இழந்திருக்கிறேன்.**

மது அருந்துவதால்.........
1. மூளை சரியாக வேலை செய்யாது.
2. சரியான முடிவு எடுக்க முடியாது.
3. குடும்பமும் பாதிக்கும்.



(ஜெயிலர் இசை வெளியீட்டு விழாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ரசிகர்களிடம் கோரிக்கை)

**மது தான் நான் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு.**
அனுபவத்தில் சொல்கிறேன்.

**மது அருந்தாதீர்கள்...!**

# பழந்தமிழரின் அடையாளம் வேல்!



தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே போர் முறைகளில் சிறப்புக் கொண்டிருந்தனர் என்பதற்கு சான்றாக தொல்காப்பியத்தில் பண்டையப் போர் பற்றிப் பலக் கருத்துக்கள் காணப்படுகின்றன. நிலப்பகுதிக்கு ஏற்பவே போர்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை "புறத்திணையியல்" வழியாகப் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும், மனிதனின் நாகரிக வளர்ச்சியின் அடிப்படையில் போர்களுக்கானக் காரணமும் வளர்ந்து வந்திருக்கிறது.

உதாரணமாக, ஆதியில் வாழ்ந்த குறிஞ்சி மக்களுக்கு அவர்கள் பழக்கப்படுத்தியக் கால்நடைகளே முக்கியம். எனவே, குறிஞ்சியில் ஆநிரைகளை கவர்தல், அதனை மீட்டலுக்குமான போர்கள் நடைபெற்றுள்ளன. பின்னர், குழுவாக வாழத் தொடங்கிய வளர்ச்சி நிலையான முல்லையில், தம்மை மதியாத வேந்தனை எதிர்த்தும், காட்டு வளம் மீது கொண்ட ஆசையின் காரணமாகவும் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. வேளாண்மை நாகரிகமும், ஊர்கள் கூடிய நாடு எனும் கலாச்சாரமும் வளர்ந்த மருத நிலப்பகுதியில் சொத்தாகக் கருதப்பட்ட எயிலை முற்றுகையிட்டு நாட்டைக் கைப்பற்றுதலும், எயிலைக் காத்துத் தம் நாட்டைப் பாதுகாத்தலுக்குமான போர்கள் நடத்தப்பட்ட வரலாற்றை அறிய முடிகிறது. ஒரு தேசமென உருவான பின்னர், நாட்டின் வலிமையைப் பறை சாற்றும் அம்சமாக வர்த்தகம் பார்க்கப்பட்டது. எனவே, உற்பத்தி பெருக்கம், கடல் வாணிபம் மற்றும் பண்டமாற்று ஆகியனவே யார் அப்பகுதியில் ஆள்வது என்பதை நிர்ணயித்தன. எனவே, நெய்தல் நிலத்தில் வலிமை குறித்தப் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. சேர, சோழ மற்றும் பாண்டியர் காலத்தில் இவ்வகைப் போர்கள் குறித்த கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவ்வாறு, நான்கு வகைப் போர்கள் நிகழ்ந்ததாகத் தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

தொல்பொருள் ஆராய்ச்சிகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், மெய்கீர்த்திகள், நாணயங்கள், பயணக் குறிப்புகள், ஆவணங்கள் எனப் பலவற்றிலும் போர் முறைகளைப் பற்றியத் தகவல்களைக் காண முடிகிறது. மேலும், சங்க இலக்கியங்களில் எண்ணற்றப் பாடல்கள் போர் நிகழ்வுகளைக் குறித்து பாடப்பட்டுள்ளன.

தமிழரின் அடிப்படை முக்கருவிகளாக வில், வேல், அம்பு ஆகியன பண்டைக் காலம் தொட்டே அமைந்திருந்தன. அவற்றைத் தயாரிக்கவும், சரி செய்து கொள்ளவும் பல தயாரிப்பு நிலையங்களைத் தமிழர் வைத்திருந்தனர். திறனொழிந்த படைக்கருவிகளை அப்படியே விட்டுவிடாது மீண்டும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தமிழர் கற்றிருந்தனர். முற்றிலும் பயனாகாதப் படைக்கருவிகளைப் படைவீடுகள் அமைக்கப் பயன்படுத்திக் கொண்டனர். இது போன்றப் பலச் செய்திகளை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

"வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் மாலையும்
தேரும் மாவும் மன்பெறு மரபின்
ஏனோர்க்கும் உரிய"



என்றத் தொல்காப்பிய பாடல், கரிப்படை (யானைப்படை), பரிப்படை (குதிரைப்படை), தேர்ப்படை, காலாட்படை என்ற நான்கு வகை நிலப்படைகளை எடுத்துக் கூறுகிறது. வில், அம்பு, அம்பறாத்தூணி என்ற மூன்றும் அமைந்த கூட்டுக் கருவியாகத் தமிழர்கள் வில்லைப் பயன்படுத்தியுள்ளனர். "கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்" என்று இக்கருவியைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ஔவையார் பாடிய பாடல் ஒன்று, இந்த மூன்றுக் கருவிகளையும் ஒருங்காகக் காட்டுகிறது.

"மார்புறச் சேர்ந்து ஒல்காத் தோல்
செறிப்பு இல் நின் வேல் கண்டவர்
தோல் கழியொடு பிடி செறிப்பவும்
வாள் வாய்த்த வடுப் பரந்த
நின் மற மைந்தர் மைந்து கண்டவர்
புண் படு குருதி அம்பு ஒடுக்கவும்
நீயே, ஐயவி புகைப்பவும் தாங்காது"

என்றப் புறநானூற்றுப் பாடல் முக்கருவிகளும் ஓர் அரசனிடத்தில் இருந்தமையை விளக்குகிறது. இதன் மூலம், தமிழர்கள் போர் கலையின் உச்சத்தை அடைந்ததை அறிய முடிகிறது.
மேலும், வில், வாள், வேல் ஆகியன முதன்மைப் போர் கருவிகளாக இருந்துள்ளன. அவற்றோடு சேர்த்து இன்னும் பலவகைக் கருவிகள் இருந்துள்ளதை இலக்கியங்கள் மூலமாக அறிய முடிகிறது. அவற்றுள் சில: வில், அம்பு, வேல், அரிவாள், ஆண்டலையடுப்பு, ஈர்வாள், உடைவாள், கதிருவாள், கதை, கவை, கல்லிடு கூடை,

கணையம், கழுகுப்பொறி, கவசம், குத்துவாள், கைவாள், கொடுவாள், கோல், சிறுவாள், தகர்ப்பொறி, தொடக்கு, பிண்டிபாலம், ஞாயில், மழுவாள், விளைவிற்பொறி, அரிதூற்பொறி, இருப்பு முள், எரிசிரல், கழு, கருவிலூகம், கல்லமிழ் கவண், கற்றுப்பொறி, கழுமுள், குந்தம், கூன்வாள், கைபெயர், கோடாரி, சதக்கணி, தண்டம், தூண்டில், தோமரம், புதை, நாராசம், வச்சிரம் ஆகியன. போர்க் கருவிகளே இத்தனை இருந்திருந்தால், போர்கள் எவ்வாறு நிகழ்ந்திருக்கும் என்பதை கற்பனைக் கூட செய்ய இயலாது. பாகுபலியின் பிரமாண்டங்களுக்கும் அப்பால் எமது வாழ்வியல் இருந்திருக்கிறது என்பதே உண்மை.

பல படை கருவிகள் இருந்தாலும் வேல்ப்படைக்கு உள்ள சிறப்புகள் வேறு எந்தப் படைக் கருவிக்கும் அன்று இருந்திருக்கவில்லை என்பதை நாம் இங்கு அறுதியிட்டுக் கூறலாம். தமிழ் மன்னர்களின் தனித்த ஆயுதம் வேல் ஆகும். வெல்“ என்ற வினைச்சொல்லே நீண்டு “வேல்“ என்ற பெயர்ச்சொல் ஆகிறது! ஆகவே, வேல் என்றால் வெற்றி!

வேலும் ஈட்டியும் வெவ்வேறு ஆயுதங்கள். வேலின் முகம் அகன்று விரிந்திருக்கும். ஈட்டியின் முகமோ குறுகி இருக்கும். வேல் ஆயுதத்தை மன்னர்களும் படைத்தலைவர்களுமே ஏந்துவார்கள். ஆனால் ஈட்டியை அனைத்துப் போர் வீரர்களும் வைத்திருப்பர். பகைவனில் இருக்கும் சிறந்த போர் வீரனுக்கே வேலை எறிவார். எல்லோருக்கும் இந்த வேலை எறிவது இல்லை என்பது இங்கு ஒரு சிறப்பு அம்சமாக காணப்படுகின்றது.

கருங்கடை, மரக்காழ், பலகை, திண்பிணி, சுரை, வடிமணி, இலை, கதுவாய், நுதி, நீறு, புலியுறை, தாலி ஆகிய இந்தப் பன்னிரெண்டு சொற்களும் வேலின் உறுப்புகளைக் குறிப்பதும், அது தொடர்புடைய அடையாளங்களைக் குறிப்பதும் ஆகும்.

ஆளுயரத்தில் வீரர்கள் பயன்படுத்திய வேல் உறுதியான மரக் கம்பினையே கொண்டுள்ளது. அதன் கீழ்ப் பகுதியில் இரும்பினால் ஆன பூண் இருக்கும். அது கருங்கடை எனப்படுகிறது. ஒவ்வொரு வீரனின் உயரத்திற்கும் ஏற்ப அவனது மேற்கழுத்து வரையிலான கம்பின் உச்சியில் மரம், செம்பு, பித்தளை, இரும்பு அல்லது தங்கத்தினால் ஆன சதுரப்பலகை பொருத்தப்பட்டிருக்கும். அந்தப் பலகைச் சதுரத்தின் அகலம் ஒரு சாண். சதுரப் பலகையின் மேற்புற நடுவில் ஒரு துளை இடப்பட்டு அதில் சுரை இடப்பட்டிருக்கும். பலகையின் கீழ்ப்புறம் தாமரையின் மடல்



போன்றும் சிறிய கட்டுப்பகுதியில் குடம் போன்றும் அக்குடத்தின் கீழ் தாழி என்ற பகுதியும் தூண்களில் உள்ளது போன்று கடைசல் செய்து வட்ட வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். அந்தத் தொங்கல் ஒரு குழாய் போல வார்க்கப்பட்டு அதில்தான் வேல்கம்பின் நுனிப்பகுதி நன்கு செருகிப் பொருத்தப்பட்டிருக்கும். அது திண்பிணி எனப்படுகிறது.

ஒரு வீரன் ஒரே கம்பில் வேறு வேறு வடிவம் மற்றும் எடையுள்ள பலகைகளைத் தேவைக் கேற்ப மாற்றி மாற்றிப் பொருத்திப் பயன்படுத்தியிருக்கிறான் என்று தெரிகிறது. ஆனால் பலகையின் சதுர வடிவத்தை மட்டும் என்றுமே மாற்றியது இல்லை. பலகைகளின் நான்கு மூலைகளிலும் சிறிய மணிகள் தொங்கவிடப் பட்டிருந்தன. அவை வடிமணி என அழைக்கப் பெற்றன. பலகையானது மடை என்ற சொல்லாலும் குறிப்பிடப்படுகிறது.



வேலின் இலைப் பகுதியின் கூர்மையான இருபகுதிகளும் கதுவாய் என்று அழைக்கப்படுகின்றன. அதன் மேற்புற நுனியும் அதன் கூரிய வடிவமும் நகத்தின் கூர்மை போன்று உள்ளமையால் நுதி என்று அழைக்கப்படுகிறது.

வேல் ஒளி பொருந்தியதாகவும் இருபுறமும் திருநீறு பூசப்பட்டும், வேப்பிலை போன்ற அடையாளங்கள் பொருந்தியும் இருந்ததை அறிய முடிகிறது. வேலின் பலகையின் கீழான கழுத்துப் பகுதியில் தாலிக் கட்டாக ஒரு கயிறு கட்டப் பெற்று, அந்தக் கயிற்றின் எச்சம் கொசுவமாக மடிக்கப்பட்டு வீரனின் இடுப்பில் செருகப்பட்டிருக்கும் என்று தெரிகிறது. வேலை எடுத்தெறிந்தவுடன் மீண்டும் எடுத்துப் பயன்படுத்த அக்கயிறு பயன்பட்டிருக்கும் என்று தெரிகிறது. கடலிலும், காட்டிலும், போரிலும் ஒற்றை வேலைப் பயன்படுத்தும் வீரனுக்குக் கயிறும் கட்டாயம் தேவைப்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

ஒரு ஆயுதமாக எம் மத்தியில் வேல் வழக்கொழிந்து போனாலும் தமிழரின் வழிபாட்டியலோடு இன்றுவரை தொடர்ந்து வேல் வந்திருக்கிறது. நன்றி மறவாமல் எமக்கு உதவும் எல்லாவற்றையும் வழிபடும் முறையைக் கொண்டவர்கள் தமிழர்கள். உலகைக் காட்டும் சூரியன், காற்றையும் மழையையும் தரும் மரங்கள், உழவுக்கு உதவும் மாடுகள் என்று சகலவற்றையும் வழிபட்டவர்கள் பல வழிகளிலும் தமக்கு உதவும் ஆயுதங்களையும்

வழிபட்டார்கள். இதன் விளைவாக இன்று யுத்த களங்களில் வேலைக் காணாவிட்டாலும் ஆலயத் தலங்களில் வேலைக் காண முடிகிறது.

தமிழ்க் கடவுள் என்று போற்றப்படும் முருகனின் கையில் வேல் ஆயுதமாக இருப்பதும், வேலை முருகனின் அடையாளமாகவே வழிபடும் வழக்கம் தமிழருக்கு இருப்பதும் வேலுக்கும் தமிழருக்குமான நெருக்கத்திற்கான நடைமுறை ஆதாரங்கள். முருகனின் கையிலுள்ள வேலின் வடிவம், நமது அறிவு ஆழமானதாகவும், பரந்ததாகவும், கூர்மையானதாகவும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் வண்ணம் நீண்ட அடிப்பாகத்தையும் மேல் பகுதியின் அடி அகன்றும் நுனிப்பகுதி




கூர்மையானதாகவும் அமைந்துள்ளது என்று கருதப்படுகிறது.

அந்த வகையில் ஈழத்தின் முக்கிய ஆலயங்களான நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலும், தொண்டமனாற்றின் கரையில் உள்ள செல்வச்சந்நிதியான் திருத்தலத்திலும் கருவறையில் வேல் தான் மூலமூர்த்தியாக வழிபடப்படுகிறது. அலங்காரக் கந்தனாகவும், அழகுக் கந்தனாகவும் போற்றப்படும் நல்லூர்க் கந்தன் வேல் வடிவமாக திருவீதிவலம் வரும் அழகை அட்டையில் பாருங்கள். பொன் ஆபரணங்களாலும், மலர் மாலைகளாலும் எமது பழந்தமிழர் பண்பாட்டு மரபு அலங்கரிக்கப்பட்டு வேலாக கற்பூர ஜோதியோடு சங்கமிக்கும் காட்சி உங்களுக்கு சொல்லும் செய்தி என்ன?

இந்த வேல் தமிழைக் காக்கும்! இந்த வேல் தமிழரைக் காக்கும்! இந்த வேல் தமிழ் வரலாற்றைக் காக்கும்! இந்த வேல் தமிழ் மரபைக் காக்கும்! ஆயுதங்கள் அழிப்பதற்கல்ல! காவல் செய்வதற்கு என்பதை சொல்லி நிற்கிறது நல்லூரான் வேல்! இனியொருமுறை வேலை வணங்கும் போது ஆண்டவனாக மட்டும் பார்க்காமல் பழந்தமிழரின் அடையாளமாகவும் கருதி வணங்குங்கள். இதனை உங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள்.

**‘வேல் உண்டு வினையில்லை’**



# மனநெருக்கீடுகளில் இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை

**24 மணி நேர இரவு பகல் சேவை**
**எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் **071 071 2345**

துறை சார் மருத்துவர்களும் ,குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு தயாராக உள்ளனர் .

மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்

இச் சேவையானது முற்றிலும் இலவசமான மருத்துவ சேவையாக அபயம் நிறுவனத்தனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தும் இரகசியமாக பேணப்படும்

அபயம் – கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு
**UK Registered Charity No: 1184089**

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர்

அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்புடன் சிவபூமி மற்றும் தூமி அமைப்புக்கள் முன்னெடுக்கும் விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர் எனும் செயற்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட பாடசாலைகளின் சமூகநெறிக் கழகங்களின் பொறுப்பாசிரியர்களுடனான கலந்துரையாடல் 22.07.2023 அன்று கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது. வைத்தியர் ரஜீவ் அவர்களும் கலந்து கொண்ட நிகழ்வில் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்திருந்த வைத்தியர் க. பார்த்தீபன் அவர்கள் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்கள். எதிர்கால திட்டங்கள் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுக்கப்பட்டன.



அதன் ஒரு அங்கமாக கிளிநொச்சி றோயல் கல்வி நிலைய மாணவர்களுடனான போதைப்பொருள் விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் 23.07.2023 அன்று நடைபெற்றது. பெருமளவான மாணவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் கல்வி நிலைய அதிபர் குமார் அவர்களும், வைத்தியர் க. பார்த்தீபன் அவர்களும், தூமி உறவுகளும் மாணவர்களுடன் போதைப்பொருட்களின் தீமைகள் சம்பந்தமாகவும், கல்வியின் தேவை சம்பந்தமாகவும் கலந்துரையாடினர்.





யாழ் மத்திய கல்லூரியில் 06.07.2023 அன்று இடம்பெற்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் மற்றும் வளவாளராக கலந்து கொண்ட மருத்துவர். திரு. ரஜீவ் ஆகியோர் மாணவர்களுடன் கலந்துரையாடினர். பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய சமூகநெறிக் கழகமும் உருவாக்கப்பட்டது.
















# நூலகத்தை வலுவூட்டல்

திருவாளர் செ. சிவசீலன் அவர்கள் தனது தந்தை அமரர் நீலகண்டு செல்லக்கண்டு நினைவாக மு/ தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலையின் நூலகத்துக்கு புத்தக அலுமாரி மற்றும் ஒரு தொகுதி புத்தகங்களும் தூமி அமையத்தின் ஊடாக வழங்கி இருந்தார்.






# யாழில் ஒட்டப்பட்ட விசித்திரமான சுவரொட்டி.







வீதியில் குப்பைகள் கொட்டுவது பொதுவாக நம்மவர்கள் எல்லோரிடமும் உள்ள கெட்ட பழக்கம். அதனால்தான் இங்கே குப்பை போடாதீர்கள் அறிவிப்பு எல்லா வீதிகளிலும் உள்ளது. ஆனாலும் அதை நம்மவர்கள் கண்டுகொள்வதில்லை. இப்படியானவர்களிற்கு இன்னொரு உத்தியை கடைப்பிடித்துள்ளார் யாழ்ப்பாண வாசியொருவர். யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயில் வீதியிலுள்ள வீடொன்றின் முன்பாக விசித்திரமான அறிவித்தல் காணப்படுகிறது.

அதில் “சூனியம் வைக்கப்பட்டுள்ளது. வாகன விபத்து நிச்சயம் ஏற்படும். தயவு செய்து வீதிகளில் குப்பை கொட்டாதீர்கள்” என எழுதப்பட்டுள்ளது அத்துடன் சூனிய பொம்மை மற்றும் இயந்திர தகடும் சேர்த்து வைத்து அப்பகுதி மக்களை பெரும் பதற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளார்.

# மீள இலங்கை வரும் கலைப்பொருட்கள்








நெதர்லாந்தில் உள்ள Rijksmuseum அருங்காட்சியகங்களில் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக வைக்கப்பட்டிருந்த கண்டி இராச்சியத்தை சேர்ந்த ஆறு கலைப்பொருட்கள் இலங்கைக்கு மீள ஒப்படைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானியை நெதர்லாந்து அரசாங்கம் வெளியிட்டுள்ளதாக தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சனோஜா கஸ்தூரியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதில், கண்டி பீரங்கி என அழைக்கப்படும் அலங்கரிக்கப்பட்ட துப்பாக்கி, தங்கம் மற்றும் வெள்ளியிலான வாள்கள், கத்தி மற்றும் இரண்டு துப்பாக்கிகள் என்பன அந்த கலைப்பொருட்களில் அடங்கும்.

# வலி சுமந்த பொழுது...!

(சிறுகதை)



கற்சிலைமடு தாரு

அன்று 2019 டிசம்பர் இருபத்தைந்து. மாலை ஆறு மணி. சூரியன் மறைந்துகொண்டிருந்தான். பறவைகள் இரைதேடி முடித்து இருப்பிடம் நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. எனக்கு இரவு ஏழு மணிக்குப் பாடசாலையில் மேலதிக கணித வகுப்பு இருந்தது. புத்தகப் பையை எடுத்துத் தோளில் போட்டபடி எனது சைக்கிளை எடுத்து மெல்ல மெல்லப் பாடசாலையை நோக்கி மிதிக்கத் தொடங்கினேன். சற்று நேரத்தில் பாடசாலையை அடைந்து விட்டேன். இருட்டிவிட்டாலும் அங்குள்ள மின்குமிழ் வெளிச்சத்தில் என் நண்பர்கள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருப்பது கண்களுக்குத் தெரிந்தது. நான் வருவதை என் நண்பன் ரவியும் கண்டுவிட்டான்.

“டேய்... தாரு.... வாவன்டா விளையாடுவம்.... வா... வா...”

“இல்லடா நீங்கள் விளையாடுங்கோடா... நான் கணிதப்பாட வீட்டு வேலை செய்யாம வந்திட்டன்... அதுதான் செய்யப் போறன்டா...”

“ஐயோ.. ஓமடா.. நானும்தான் செய்யோணும்... பொறு பொறு நானும் வாறன்.”

என்றபடி அவனும் என் பின்னால் ஓடி வந்தான். இருவரும் வகுப்பறைக்குச் சென்று கணிதபாட வீட்டு வேலைகளைச் செய்துமுடித்தோம். செய்து முடித்ததும்தான் தாமதம் மீண்டும் ரவி விளையாடப் போய்விட்டான். நானும் அவன் பின்னால் சென்றேன். செல்வதற்கிடையில் கணித பாட ஆசிரியரின் வருகையைச் சொல்லும் விதமாக அவரின் மோட்டார் சைக்கிள்

சத்தம் கேட்டது. உடனே அனைத்து நண்பர்களும் வகுப்பறைக்கு ஓடிச்சென்று தத்தம் இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். பின் ஒன்றும் நடக்காததுபோல் அமைதியாய் இருந்து, கொப்பிகளைத் தட்டத் தொடங்கினர். அந்த நேரத்தில் ஆசிரியரும் வகுப்புக்குள் வந்து சேர்ந்தார். அவர் வந்தவுடன் அனைவரும் எழுந்து அவருக்கு வணக்கம் கூறி அமர்ந்தோம். வந்தவர் ஏதோ நோய் பரவுவதாக முன்னால் இருந்த மாணவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். சீனாவிலிருந்து ஏதோ வைரஸ் நோய் பரவி வருவதாகக் கதைத்துக் கொண்டிருப்பது விளங்கியது.

“டேய் தாரு... சீனாவில இருந்து ஏதோ வைரஸ் பரவுதாமடா... அவங்கள் ஏதோ பாம்பு, வெளவால்களத் திண்டதால அதிலயிருந்து பரவுதாம்...”

“அது தொத்தினா என்ன செய்யுமாமடா?”

“அது பரவினோடன மூச்சுத் திணறி ஆக்கள் செத்துப்போடுவினமாமடா...”

என்று அவன் எனக்குச் சொல்லி முடிப்பதற்குள், ஆசிரியர் மேலும் தொடர்ந்தார்.

“பிள்ளைகள் இண்டைக்குச் செய்தி பாத்தனீங்களோ?”

“ஓம் சேர்”
எனச் சிலர் குரல் கொடுத்தனர்.

“சீனாவில ஏதோ வைரஸ் பரவீற்றுதாம்.... அது இப்ப எல்லா நாட்டுக்கும் பரவுதாம். அந்த வைரஸ் உயிரைக் கொல்லுற வைரஸாம். நீங்கள் இனிக் கவனமா இருக்கோணும். மாஸ்க் போடோனும். கிட்டக்கிட்ட யாரும் நிண்டு கதைக்கக் கூடா...? ”

என்று ஆசிரியர் கூறும்போதே எல்லோருக்கும் பயம் வந்துவிட்டது. அன்று எல்லோருக்கும் படிப்பில் அக்கறை இருக்கவில்லை. அந்த வைரஸை நினைத்துப் பயந்துகொண்டே வகுப்பை முடித்தோம். வகுப்பு முடிந்து வீடு திரும்பும்போது நேரம், இரவு ஒன்பதைத் தாண்டிக்கொண்டிருந்தது. இரவு நேர நிலா வெளிச்சம் எங்கும் பரவி பகலாகத் தெரிந்தது. வானத்தில் கண்ணுக்கெட்டிய தூ ரத்தில் இராக்குருவிகள் பறந்து வட்ட மிட்டுக்கொண்டிருந்தன. நட்சத்திரங்களும் மின்னி மின்னி ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் பார்த்தபடியே அமைதியாக வீட்டை வந்தடைந்தேன். வந்தவுடனேயே வகுப்பில் நடந்த விடயங்களை அம்மாவிடம் கூறிவிட்டேன்.

“ஓமடா... தம்பி... பெடியளோட திரியுறனி கவனமப்பு... நாளைல இருந்து மாஸ்க் போட்டிற்று வகுப்புக்களுக்குப் போ...”

என்று அம்மா சொல்வது எனக்கு மிகுந்த பயத்தினை மேலும் உண்டுபண்ணியது. அன்று இரவுச் சாப்பாட்டு நேரம். வீட்டில் எல்லோரும்

இந்த வைரஸ் புதினத்தைப் பற்றித்தான் கதைத்துக் கொண்டிருந்தோம். சாப்பாடும் பயத்தில் அவ்வளவாக இறங்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். இரவுப் படிப்பும் எனக்கு அவ்வளவாக ஓடவில்லை. படிக்கும் எண்ணமும் வரவில்லை. மனது முழுக்க அந்த வைரஸ் பற்றிய பீதியே ஓடிக்கொண்டிருந்தது.

இரவுத் தூக்கமும் எனக்கு வருவதாக இல்லை. வகுப்பில் ஆசிரியர் கதைத்தவற்றையே நினைத்துக் கற்பனை செய்துகொண்டிருந்தேன். திறந்து கிடந்த ஜன்னல் இடைவெளிகளினூடாக வந்த குளிர் காற்று, என்னைத் தழுவித் தூங்க வைக்க முயற்சித்துக்கொண்டிருந்தது. சில்லென்ற அத் தென்றலின் தாலாட்டில் மெய்மறந்து தூ ங்கிவிட்டேன். கண்விழித்த போது விடிந்து விட்டது. எழும்பிச் சென்று முற்றத்து மாமரத்து ஊஞ்சலில் இருந்தபடி வானத்தை நோட்டமிட்டுக்கொண்டு இருந்தேன்.

“டேய்.. தம்பி.... கால்முகத்தக் கழுவீட்டு வாவன்.. தேத்தண்ணி ஆத்தீட்டன்...”

என்று அம்மாவின் குரல் ஒலித்தோய்ந்தது.

“பொறனணே... கொஞ்ச நேரம் இருந்திட்டுப் போறன்...”

என்ற படி அப்படியே காலைக் காட்சிகளை இரசித்துவிட்டு, வீட்டுக் குந்தில் இருந்த பற்பொடியை எடுத்துப் பல்லை மினுக்கியபடி கிணற்றடிக்கு நகர்ந்தேன். அள்ளி வைக்கப்பட்டிருந்த இரண்டு வேசன் தண்ணியில் மேல் கழுவி விட்டு மறுபடியும் வீட்டுக்குத் திரும்பினேன்.

“அப்பனே சிவ சிவா..”
என்றபடி சுவாமி அறையிலிருந்து திருநீற்றை எடுத்து நெற்றியில் பூசியபடி குசினுக்குள் சென்று அம்மா தந்த தேத்தண்ணியையும், நாலைந்து பிஸ்கட்டுகளையும் வாங்கிக்கொண்டேன். அப்போதுதான் சூரியன் எப். எம்மில் காலைச் செய்தி ஒலி பரப்பாகிக் கொண்டிருந்தது. கொரோனா என்ற பெருந்தொற்றின் விளைவுகளையும், மக்கள் பாதுகாப்பாக நடந்துகொள்ள வேண்டிய அவசியமும் அதில் வலியுறுத்தப் பட்டுக்கொண்டிருந்தன. அவற்றைக் கேட்டபடியே புத்தகப் பைக்குள் அன்றைய பாடப் புத்தகங்களையும், கொப்பிகளையும் அடைஞ்சுகொண்டு, உடுப்பையும் மாற்றிக்கொண்டு பள்ளிக் கூடத்திற்குப் போவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தேன்.

“இந்தா தம்பீ... மாஸ்க் ஒண்டு வேண்டீட்டு... மிச்சத்திற்கு இண்டைக்குக் கன்ரீன்ல ஏதாச்சும் வாங்கிச் சாப்பிடன்.”

என்றபடி ஐம்பது ரூபாய்க் காசையும், தண்ணீர்ப் போத்தலையும் அம்மா என்னிடம் தந்து வழியனுப்பிவைத்தார்.

“அம்மா... பாய்...”
“ஓம் தம்பீ... கவனம் தம்பீ...”

என்று அம்மா கூறும் வார்த்தைகள்

என் பாதுகாப்பை நினைவுபடுத்தியது. நான் விரைவாகச் சைக்கிளை மிதித்துச் சென்றாலும், பள்ளிக்கூடத்திற்குப் பிந்திச் சென்றதன் அறிகுறியாகக் காலைப் பிரார்த்தனை நடந்துகொண்டிருந்தது. சைக்கிளைப் பார்க்கில் விட்டுவிட்டுப் பிந்திச் சென்றவர்கள் நின்ற வரிசையில் ஓடிச்சென்று நின்றுகொண்டேன். அப்போது தான் தேவாரமும் ஒலித்து ஓய்ந்திருந்தது.

"பிள்ளைகளுக்கு வணக்கம்...."
"வணக்கம் சேர்.."

"பிள்ளைகள் எல்லோரும் கேள்விப் பட்டிருப்பியள்.... இப்ப புதிய வைரஸ் பரவி வருகுதாம்... எல்லோரும் கட்டாயம் மாஸ்க் போடவேணும்.. நெருக்கமா நிண்டு கதைக்கக்கூடாது... அதுக்கேற்றமாதி எல்லோரும் பாதுகாப்பா இருக்க வேணும்... எல்லாரும் அடிக்கடி கையைச் சோப்போட்டுக் கழுவ வேணும்.... கழுவீட்டுத்தான் வகுப்புக்க வரோணும்....."

என்று அதிபர் கூறிய கருத்துக்கள் எல்லோருக்கும் பயத்தினை உண்டுபண்ணுவதாகவே இருந்தது. நேரம் கடந்து இடைவேளை மணியும் ஒலித்தது. நாங்கள் மைதானத்திற்குச் சென்றோம். இன்று என் நண்பன் ரவி பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. அதனால் விசராக இருந்தது. மைதானத்தில் அண்ணாக்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

"அண்ணா நானும் வரட்டோ விளையாட?..."

"ஓமடா... வா... வா... விளையாடுவம்.."

என்று கேட்டபோது, ஒரு அண்ணா குரல் கொடுத்து என்னையும் இணைத்துக் கொண்டார். விளையாட்டில் நேரம் சென்றதே புரியவில்லை. இடைவேளை முடிந்ததற்காய் 5ஆம் பாட வெல் ஒலித்துக்கொண்டிருப்பது எங்கள் காதுகளில் விழுந்தது. விளையாடிய வேகத்தில் வகுப்பறைக்குள் ஓடிக் குந்திக்கொண்டோம். பாடங்கள் நடந்தன. நேரங்களும் கடந்தன. பாடசாலை விட்டு வீடு திரும்பினேன். பள்ளிக்கூட உடுப்புக்களைக் கழற்றி மாற்றிவிட்டுக், கால், முகம் கழுவி வந்து மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டேன். சாப்பிட்ட களைப்பில் முற்றத்து மாமர ஊஞ்சலில் சரிந்தேன். நல்ல காற்று வீசி என்னைத் தாலாட்டிக்கொண்டிருந்தது.

"தம்பீ... எழும்படா..."

"கொஞ்ச நேரம் கிடக்கிறன் பொறணே... நல்ல நித்திர வருது..."

"ஒரே உதுக்குள்ளதான் கிடக்கிறாய்... ஐஞ்சு மணி ஆகீட்டு.. எழும்பு.."

என்று அம்மா கூறியபோதுதான் நேரம் நித்திரையோடு கடந்தது புரிந்தது. எழும்பிச்சென்று முகத்தைக் கழுவிவிட்டு வந்து, அம்மா ஊத்தித் தந்த தேத்தண்ணியைக் குடித்துவிட்டு,

"அம்மா... இண்டைக்கு ரவி பள்ளிக்கூடத்துக்கு வரேல்லயம்மா... என்னணண்டொருக்கா எட்டிப் பாத்திட்டு வாறனணே...."
என்று அம்மாவிடம் கூறிவிட்டுச் சைக்கிளை எடுத்து மிதித்தபடி ரவியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். ரவியின் வீட்டுக்குச் செல்லும் வீதி அழகாகத்தான் காட்சி தந்தது. வீதியின் இருமருங்கும் மாஞ்சோலைகளும், தென்னந் தோப்புக்களும் நிறைந்திருந்தன.

"ரவி... ரவி.... ரவி..."

"ஓமடாப்பு... வாப்பு... உள்ள..."

ரவியின் அம்மாவின் குரலைக் கேட்டு சைக்கிளைத் தள்ளிச் சென்று தென்னை மரத்தில் சாத்திவிட்டு உள்ளே சென்றேன்.

"ரவி நிக்கிறானா...? இண்டைக்குப் பள்ளிக்கூடமும் வரேல்ல"

"ஓமப்பு... இண்டைக்கு விதைப்புத்தானே அதுதான் தேப்பனோட வயலுக்குப் போய்வந்து உள்ளுக்க படுத்துக் கிடக்கிறான்.. கொஞ்சம் பொறு எழுப்பி விடுறன்."

என்றபடி அவனுடைய அம்டமா வீட்டுக்குள் சென்று மறைந்தார். சிறிது நேரத்தில் ரவி கண்களைக் கசக்கியபடி வெளியில் வந்து சேர்ந்தான். வந்தவனை அழைத்துக்கொண்டு, பள்ளிக்கூட மைதானத்திற்குச் சென்று கிரிக்கெட் விளையாடிவிட்டு, வீடு திரும்புகையில் நேரம் மாலை 6.30ஐத் தாண்டிவிட்டது. இருள் கௌவியது. எல்லோரும் தங்கள் பணிகளை முடித்துவிட்டு வீடுகளை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். வீட்டை அடைந்து கால், முகம் கழுவிவிட்டுப் பள்ளிக்கூட வீட்டுவேலைகளைச் செய்து முடித்தபின், இரவு உணவை உண்டுவிட்டுத் தூங்கிவிட்டேன்.

இப்படியே ஐந்தாறு நாட்கள் கழிந்தன. இப்போது கொரோனாவின் தாக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது. பல பகுதிகள் முடக்கப்படுவதாகவும் செய்திகள் வந்தன. கொழும்பின் பல பகுதிகளில் லொக்டவுன் போட்டதாகவும், பல நூற்றுக்கும் அதிகமானோர் நோய்த்தொற்றுக்கு ஆளாகித் தனிமைப்படுத்தல் மையங்களில் தனிமைப்படுத்தப்பட்டதாகவும், பலரின் இறந்த உடல்கள் உறவினர்களிடம் கொடுக்கப்படாமல் எரியூட்டப்படுவதாகவும் செய்திகள் பரவத் தொடங்கின. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் என எல்லாவற்றிலும் கொரோனாவின் பாதிப்புக்களே பேசப்பட்டன. அவற்றிலிருந்து தப்புவதற்காகப் பாதுகாப்புச் செயன்முறைகளையும் அரசு அறிவித்துக்கொண்டிருந்தது.

நாட்டில் முக்கியமான நகரப் பகுதிகள் அனைத்தும் முடக்கப்பட்டன. அத்தியவசியம் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளுக்கு இடமளிக்கவில்லை. அதனால் எங்களுக்கும் பாடசாலை நிறுத்தப்பட்டது. வேறு மாவட்டங்களுக்குச் சென்று வந்தவர்களும் சந்தேகத்தில் 14

நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். எங்கள் ஊரிலும் இவ்வாறு பலர் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டனர்.

போர்க்காலத்தில் போடப்பட்ட ஊரடங்கு இப்போது இக்காலத்திலும் சாதாரணமாகவே நடைமுறையில் இருந்தது. இதனால் வீதிகளுக்கு இறங்க முடியாத நிலை நிலவியது. இந்நோய்த் தொற்று ஏற்பட்டால் இறப்பு நிச்சயம் என்ற நிலையே இக்காலத்தில் இருந்ததது. இதனால் அனைவரும் பயத்துடன் வீடுகளில் முடங்கிக் கிடந்தனர். தடிமல், காய்ச்சல் என்று வைத்தியசாலைக்குப் போவதற்குக்கூட எல்லோரும் பயந்தார்கள். ஆனாலும் நாங்கள் ஊர்ப் பெடியளோடு வீடுகளில் விளையாடிக் கொண்டிருந்தோம். படிப்புச் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டதனால் எங்களுக்கு விளையாட்டு மட்டுமே நாளைப் போக்காட்டப் பொழுதுபோக்காய் இருந்தது.

வீதிகளில் மக்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டு ஊரடங்கு போடப்பட்டாலும், இக்காலத்தில் நாங்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கவில்லை என்றுதான் சொல்லத் தொன்றுகின்றது. அந்தளவிற்கு கிளித்தட்டு, கிட்டிப்புள், கிரிக்கெட், வொலிபோல் என்று பல விளையாட்டுக்கள் வீடுகளில் விளையாடப்பட்டுக் கொண்டிருந்தன. பொழுது போக்குக் கருதி வீட்டுத்தோட்டம் அமைத்துப் பலர் பொழுதைக்கழித்துப் பயன் பெற்றனர்.

சுகாதாரப் பணியாளர்களும், பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து நோய் தொடர்பான விழிப்புணர்வுகளை ஊர் ஊராக வழங்கிக் கொண்டிருந்தனர்.

“மக்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல். கொடிய தொற்று நோயிலிருந்து தப்புவதற்காக ஊரடங்கு போடப்பட்டுள்ளதால் அனைவரும் வீடுகளில் முடங்கி இருக்கும் வண்ணம் அன்பாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அவசியத் தேவைகளுக்கு மாத்திரமே வீட்டிலிருந்து ஒருவர் வெளியில் சென்றுவரமுடியும். ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக் கப்பட்டுள்ளது...”

என்று பொலிஸ் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் இணைந்து ஜீப் வண்டியில் அறிவித்துக்கொண்டு செல்வது தெளிவாகவே கேட்டுக்கொண்டிருந்தது.

“தம்பி..... விளையாட்டெண்டு இனி வெளிக்கிடுறத நிப்பாட்டீற்று வீட்ட இரு... றோட்டில திரியிற எல்லாரையும் பொலிஸ் புடிச்சிட்டுப்போறானாம். சும்மா பொடியளோட திரிஞ்சு கொரோனாவக் கொண்டந்திடாத... அந்த வைரஸ் இப்ப யார் யாருக்கு இருக்கெண்டே தெரியா..”

அம்மாவும் தன் பங்கிற்குப் பேசிவிட்டுக் குசிக்குள் சென்றார்.

“போணேயம்மா.. வீட்டுக்க ஒரே எப்பிடி இருக்கிற.. விசராக் கிடக்கணே... ரவி வீட்ட போய் அவனோட

விளையாடப்போறன்.. வேற எங்கயும் போகேல...”

என்று சொல்லியபடி, வீட்டுக்குப் பின்னால் இருக்கும் வயல் வெட்டைக்குள்ளால் சென்று ரவியின் வீட்டை அடைந்து, ரவியுடன் கிட்டிப்புள் விளையாடிவிட்டு ஆற்றில் குளித்து மகிழ்ந்து நேரத்தைக் கழித்தேன். சில நேரங்களில் ஆற்றோரங்களில் நிற்கின்ற காட்டுமாங்காய் பறித்து உப்புத் தூள் போட்டுச் சாப்பிடுவதும் எங்கள் வழமையான செயற்பாடாகவே இருந்தது. இப்படியே காலங்கள் கடந்தன. ஓரிரண்டு மாதங்கள் ஓடின. நோயின் உக்கிரம் மேலும் அதிகரித்து நாடே முடங்கியது. காய்ச்சல் என்று போனால் கூட பிசிஆர் எடுக்கிறார்கள் என்ற பயத்தில் அனைவரும் வைத்தியசாலைக்குச் செல்லவே அஞ்சினர். காய்ச்சல் என்றாலும், தடிமல் என்றாலும் பக்கத்து வீடுகளுக்குக் கூடத் தெரியாமல் வீடுகளில் கைமருந்துகளைப் பாவித்தபடி முடங்கிக் கிடந்தனர்.

ஆற்றில் ஒரே குளித்து விளையாடியதன் பயனாய் எனக்கும் தடிமல் பிடித்தது. ஆவி பிடிச்சும் நிற்கவில்லை. எனக்குத் தடிமல் வந்தால் ஒரு வாட்டுவாட்டிப் போவதுதான் வழக்கம். அது சாதாரணமாகவே எனக்கு வருவது. ஆனால் இந்தக்காலத்தில் இது சாதாரணமான தடிமல் என்று யாரும் ஏற்றுக்கொள்ளாத அளவிற்குக் கொரோனா எல்லோருக்கும் மரண பயத்தினை ஏற்படுத்திவிட்டது. நாட்பட்ட தடிமல் என்பதால் காய்ச்சலும் லேசாக ஓரிரண்டு நாட்கள் அடிக்கத் தொடங்கியது. இதனால் ஒன்றும் செய்ய முடியாமல் அம்மா வைத்தியசாலைக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கு சென்றவுடனேயே பீசிஆர் எடுத்துவிட்டு என்னைத் தனிமைப்படுத்தல் மையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அப்போதுதான் தெரிந்தது எனக்கும் கொரோனா என்று. எங்கள் வீடு அமைந்திருக்கும் பகுதியையும் அப்படியே ஊரோடு தனிமைப்படுத்தினார்கள்.

தனிமைப்படுத்தல் மையத்திற்குச் சென்றபோதுதான் என் ரவியும் நோய்த்தொற்றுக்கு உள்ளாகி அதி தீவிரசிகிச்சைப் பிரிவில் ஒருகிழமையாகச் சிகிச்சைபெற்று வருவதை அறிந்தேன். ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கட்டில்கள் தூரத்திற்குத் தூ ரம் வைக்கப்பட்டிருந்தன. எங்கள் கட்டிலிலிருந்து சுமார் மூன்று மீற்றர்கள் தூரத்தில் கண்ணாடிப் பொலித்தீனால் மறைப்புப் போடப்பட்டிருந்தது. அதற்கு அங்கால் நின்றபடியே வைத்தியர்களும், தாதியர்களும் எங்களின் உடல் நிலைமைகளைச் சோதித்தனர். மருந்துகளையும் வழங்கினர். மருத்துவ சேவைகளை வழங்குபவர்கள்கூட அருகில் வர அஞ்சினர். நான் கொண்டுவரப்பட்ட அன்றே, ஐந்தாறு பேர் இங்கு இறந்துவிட்டதாகவும், அவர்களின் உடல் எரியூட்டப் படுவதற்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அருகிலிருந்தவர்கள் கூறினார்கள்.

நான் படுத்திருக்கும் கட்டிலில்

இருந்தவரும் இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். எனக்குப் பயம் அதிகரிக்கக் காய்ச்சலும் அதிகரித்து உடம்பெல்லாம் சோர்வுற்றுப்போனது. பசி எடுக்கவில்லை. நெஞ்சுக்குள் சளி சத்தம்போடுவது மூச்சிழுத்து விடும்போது தெரிந்தது. பனடோலும், சுடுதண்ணியுமே தந்தார்கள். மூச்செடுக்கச் சிரமப்படும்போது ஆவிபிடித்தார்கள். நாட்கள் நகர என் நிலைமையும் மோசமடைந்தது. பசியின்மையால் சாப்பிட முடியவில்லை. நெஞ்சுக்குள் சளி முட்டியதால் மூச்சு இறுகிப்போனது. செயற்கைச் சுவாசமே இப்போது வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. நோய்க்குரிய மருந்து இன்மையால் அருகிலிருந்த பலர் இறந்து போனார்கள். நானும் இறப்பின் நிலைமையில் இருப்பதை என் மனம் உணர்ந்து கொண்டது.


“நான் தப்பமாட்டன்... இனி எப்பிடி அம்மாக்களப் பாப்பன்... என்ர அப்பாவ எப்பிடிப் பாப்பன்.... செத்தா என்ர பொடியக்கூடி வீட்ட குடுக்கமாட்டாங்கள்... கடவுளே.....”

என்று மனம் புலம்பிக்கொண்டிருக்க... என் நெஞ்சு உயர்ந்து தாழ்ந்து செயற்கைக் காற்றில் இயங்க மறுத்துத் திணறிக்கொண்டிருந்தது.

“என்ரை அம்மா.... என்னத் தனிய விட்டிற்றுப் போட்டிங்களே...”

என மனதிற்குள் அழுதுபுலம்ப, அரைவிழி திறந்து கண்ணீரை வடித்துத் தலையணையை நனைத்துக்கொண்டிருந்த என் வலதுபக்க ஒற்றைக்கண்ணில், யாரோ இருவர் ரவியின் உடலைப் பொலித்தீனால் சுற்றியபடி தள்ளிச்செல்வது தெரிந்தது....

******



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வேந்தர் வாழ் நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 19.07.2023 முதல் 21 ஆம் திகதி வரை மூன்று நாள்களில் 8 அமர்வுகளாக இடம்பெற்றது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 278 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப்பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்பட்டன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்தை பீட மட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





## மீசையால் சாதனை




7 நிமிடம் 48 செக்கன்களில் 1550 கிலோ எடைகொண்ட ஊர்தியை 400 மீற்றர் தூரம் தனது தாடியினால் இழுத்து, தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த 59வயதான திருச்செல்வம் என்பவர் உலக சாதனை படைத்துள்ளார். மேற்படி நிகழ்வு,சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் ஏற்பாட்டில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (09.07.2023) தென்மராட்சி-மட்டுவிலில் இடம்பெற்றது.



## வேகமான புகைவண்டிகள்

இலங்கையில் மணிக்கு 100 km வேகத்தில் புகையிரதங்கள் இயக்கப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் 400-KM வேகத்தில் இரயில்களை இயக்கும் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக இயக்கி புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளது சீனா. CR450 என பெயரிடப்பட்டுள்ள இவ் இரயில்கள் சோதனை ஓட்டத்தின் பொழுது 453km வேகத்தில் இயக்கப்பட்டுள்ளன. பாலங்கள், குகைகள் என அனைத்து பகுதியிலும் எதிரும் புதிருமாகவும் இயக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அத் தருணத்தில் ஒப்பீட்டு வேகம் 891km ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.






## தமிழில் ஜெருசலேமில் ஜெபம்

ஜெருசலேமில் உள்ள ஒரு தேவாலயத்தில் தமிழிலும் எழுதப்பட்டிருக்கும் ஒரு ஜெபம்! எந்த தெய்வத்தையும் குறிப்பிடாத பொதுவான ஜெபம் என்பது இதன் கூடுதல் சிறப்பு!



ஜெ. கனிஷ்ரா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

# சின்னத்திரையால் சீரழியும் பெண்கள்

தமிழ் தொலைக்காட்சி தொடர்கள் அல்லது சின்னத்திரை என்பது இலங்கை, இந்தியா ,சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களால் தயாரித்து ஒளிபரப்பு செய்யப்படும் ஒரு பொழுதுபோக்கு அம்சமாகும். குறிப்பாக பெரும்பாலான சின்னத்திரை நாடகங்கள் இந்தியாவினால் தயாரிக்கப்பட்டு இலங்கை,சிங்கப்பூர், மலேசியா, கனடா, அவுஸ்ரேலியா போன்ற தமிழ் மக்கள் வாழும் நாடுகளை பொழுதுபோக்கு நோக்கம் கருதி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. பெரும்பாலான சின்னத்திரை தொடர்கள் தமிழ்மொழி சார்ந்த கதைக்களத்துடன் தயார் செய்யப்படுவதே இதற்கான காரணமாக அமைகின்றது.

அதேவேளை இவ்வாறான நாடகங்களில் குடும்ப வாழ்க்கை, நகைச்சுவை, காதல், திகில், பக்தி, வரலாறு, மர்மம், பகை போன்ற உணர்வுகளை தூ ண்டி விடுவனவாகவே அமைக்கப்படுகின்றன. இவ்வாறான நாடகங்கள் பெரும்பாலும் வீட்டில் இருக்கும் பெண்களை இலக்கு வைத்தே ஒளிபரப்பு செய்யப்படுவதை அவதானிக்கமுடிகின்றது.

அந்த வகையில் தமது வீட்டுப்பணிகளை முடிந்த பின்பு ஆறுதலாக இருந்து தொலைக்காட்சி நெடுந்தொடர்களை பார்ப்பதற்கு ஆரம்பிக்கும் பெண்கள் நாட்கள் நகர இந்த நெடுந்தொடர்களுக்குள் மூழ்கிவிடுகின்றனர். இவ்வாறாக சின்னத்திரை அவர்களின் அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக மாறிவிடுகின்றது. மாலை 6:00 மணிக்கு நாடகங்களை பார்க்க ஆரம்பிக்கும் பெண்கள் இரவு 10:00

மணிவரை தொலைக்காட்சிக்கு திரைகளுக்குள் மூழ்கி விடுகின்றனர். அவர்களின் மொழிநடை, செயல்கள் , வாழ்க்கைமுறை, விழாக்கள் , கொண்டாட்டமுறை போன்ற எல்லாவற்றிலும் சின்னத்திரை மெதுமெதுவாக ஆக்கிரமிப்பு செய்து விடுவதாக மாறிவிடுகின்றது.

மாலை வேளைகளில் சரியாகவே அந்த நேரத்திற்கு தொலைக்காட்சி பெட்டிற்கு முன் அமரும் நெடுந்தொடர் இரசிகர்கள் பிள்ளைகளை , கணவனை, இராவுணவுகள் போன்றவற்றை மறந்து தொடர்களுக்குள் தம்மை தொலைத்து விடுகின்றனர். இவ்வாறாக தமது பயனுள்ள மணித்துளிகளை சின்னத்திரையில் செலவிடும் பென்களை நாம் அன்றாடம் கடந்து கொண்டே செல்கின்றோம்.


பொதுவாகவே பெண்கள் என்றால் இரக்ககுணம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர் . ஆனால் இந்த மெகாத்தொடர்கள் அந்த நிலைகளை கொஞ்சம் கொஞ்சமாக கழைந்து அவர்களை எதிரிகளாகவும், பகைமை குணம் கொண்டவர்களாக சித்தரித்து வருகின்றமையை அவதானக்க முடிகின்றது.

இதனால் நெடுந்தொடர்களை பார்ந்து முடித்தபின்பு அவர்கள் எவ்வாறு மற்றைய குடும்பத்தை பிரிப்பது மாமியாருக்கும், மருமகளுக்கும் எவ்வாறு பிரச்சனைகளை ஏற்படுத்தி விடுவது என்ற எண்ணத்துடன் தமது சிந்தனைகளை மழுங்கடிக்கும் பெண்களே அதிகம் காணப்படுகின்றனர். இவ்வாறாக நான் ஒட்டுமொத்தமான பெண்கள் அனைவரையும் கூறிவிடவில்லை , சின்னத்திரையே உண்மை என்று சீரழியும் பெண்ணைத்தான் கூறுகின்றேன்.

எவ்வாறு அடுத்தவர்களை வீழ்த்துவது, மனைவிக்கு துரோகம் செய்வது, பெற்றோரை ஏமாற்றுவது போன்ற எதிர்மறையான







காட்சிகளையே இவை ஒளிபரப்பு செய்கின்றன. அந்தவகையில் குறிப்பாக பெண்களை வில்லிகளாக திரிவுபடுத்தி, பெண்களுக்கு பெண்களையே எதிரிகளாக சித்தரித்து, ஒற்றுமையாக இருக்கும் குடும்பங்களை பிரிப்பது எவ்வாறு ,தாயிடம் இருந்து மகனை எவ்வாறு பிரிப்பது, மாமியார் மருமகள் பிரச்சனை ,கணவன் மனைவிக்கு இடையில் பிரச்சனைகளை எவ்வாறு ஏற்படுத்துவது என்ற காட்சிகளை திட்டமிட்டே நாடகங்கள் ஒளிபரப்பு செய்வதன் ஊடாக எம்முடைய சமூகத்தில் பல முரண்பாடுகள் ஏற்பட இவை காரணமாக அமைகின்றன.

அது மட்டுமன்றி திருமண உறவிற்கு அப்பாலான உறவு நிலைகளை எவ்வாறு பேணுவது, இரட்டை அர்த்தம் தரும் வார்த்தைகளை பயன்படுத்துவது போன்ற வாழ்வியலுக்கு ஒவ்வாத செயல்களை வெளிப்படையாக இவை காட்சிப்படுத்துகின்றன. இவ்வாறாக இவை பல குடும்பங்களை சீரழிக்கும் காரணியாக அமைந்துவிடுகின்றது.

தொடர்பாடல் கோட்பாடுகளில் ஊசி வழிக் கோட்பாடு கூறுவதைப்போல வெகுசன ஊடகங்களை பார்வையிடும் நபர்கள் அவற்றின் கருத்தியல்கள், பார்வைகளுக்கு ஆளாகின்ற செயற்பாடுகள் இங்குக் கட்டமைக்கப்படுகின்றன.

நெடுந்தொடர்களுக்குள் இவ்வாறு பூரணமாக மூழ்கிவிடாமல் மாலைப் பொழுதுகளை ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடலாம். உடற்பயிற்ச்சிகளை மேற்க்கொள்ளுதல், குடும்பமாக பூங்காக்களிற்கு செல்லுதல், பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளில் துணைபுரிதல், ருசியான சத்தான உணவுகளை தயாரித்து பரிமாறுதல் போன்ற பல்வேறு வழிகளில் செலவிடலாம்.

துப்பாக்கி சன்னக்கோட்பாடு குறிப்பிடுவதைப்போன்று எமக்கு கிடைக்கும் ஊடக தகவல்களை ஊடக வெளிச்சத்துடன் நுகர்ந்து அவற்றில் காணப்படும் நிகழ்ச்சி நிரல்களிளை சரியான முறையில் அணுக எம்மை நாம் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். சின்னத்திரையினால் ஏற்படும் பல பிரச்சனைகளில் இருந்து எம்மையும், எமது குடும்பங்களை பாதுகாக்க நிஜவாழ்க்கைக்கும் சின்னத்திரைக்கும் இடையில் காணப்படும் இடைவெளிகளை சரியாக தெரிந்து அதன்படி சமயோகிதத்துடன் சிந்தித்து செயற்படபழகிக்கொள்வோம்.



# எகிறும் பூமியின் வெப்பம்

உலகளவில் இதுவரை இல்லாத வகையில் வெப்பம் அதிகரித்துள்ளது. வட இத்தாலியில் 47 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. கிரீஸ் நாட்டில் காட்டுத்தீ பரவியுள்ளது. ஸ்பெயின் நாட்டில் கடலோர பகுதிகளில் வெப்பம் இதுவரை இல்லாத அளவை தொட்டிருக்கிறது. வெப்ப அலைக்கு ஐரோப்பியாவில் கடந்த ஆண்டு 62 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.



ஐரோப்பாவை போன்றே அமெரிக்காவிலும் வெப்ப அலை கடுமையாக வீசுகிறது. அமெரிக்காவில் பலர், வெப்பம் காரணமாக முன்பகலுக்கு பிறகு தங்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலை உருவாகியுள்ளது. இவற்றை தவிர உச்சகட்டமாக சீனாவில் வரலாறு காரணாத வகையில் 52.2 டிகிரி செல்சியஸ் வெயில் போட்டு தாக்குகிறது.

# இந்தியாவில் அரிசி ஏற்றுமதி தடை

இந்தியாவில் வானிலை மாறுபாடுகள் காரணமாக அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தியாவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கில் மத்திய அரசு, பாசுமதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளது. இதனால் சர்வதேச அளவில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயரும் அபாயம் உள்ளது. இந்தியாவின் அரிசி ஏற்றுமதி தடையால் பல்வேறு நாடுகள் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. குறிப்பாக அமெரிக்காவுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.



உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவீதமாக உள்ளது. இந்தியாவிலிருந்து 140க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

# பாட்டுப் பாடவா...?

பல்லாங்குழியின்
வட்டம் பார்த்தேன் ஒற்றை
நாணயம் புல்லாங்குழலின்
துளைகள் பார்த்தேன் ஒற்றை
நாணயம் துடிக்கும் கண்களில்
கண்மணி பார்த்தேன் கடிகாரத்தில்
நேரம் பார்த்தேன்

செவ்வந்தி பூவில்
நடுவில் பார்த்தேன் தேசிய
கொடியில் சக்கரம் பார்த்தேன்
இரவில் ஒருநாள் பௌர்ணமி
பார்த்தேன் ஒற்றை நாணயம்
*(பல்லாங்குழியின் )*

அடி காலம்
முழுவதும் காத்திருப்பேன்
நீ காணும் இடத்தினில்
பூத்திருப்பேன் அடி ஒற்றை
ரூபாய் பக்கம் இரண்டும்
எந்தன் அன்பு சேர்ந்திருக்கும்
நெஞ்சில் வைத்து காத்திரு

தங்க ஆபரணம்
ஒன்றும் தேவையில்லை
இந்த நாணயம் போதாதா
தழுவும் மனதை குங்கும
சிமிழில் தடுக்க முடியாதா

செல்வ சீதனமே
நீ சிரிக்கையிலே பல
சில்லறை சிதறிவிடும்
செலவு செய்ய நினைத்தால்
கூட இதயம் பதறிவிடும்
*(பல்லாங்குழியின் )*

அட நேற்று நடந்தது
நாடகமா நீ காசு கொடுத்தது
சூசகமா அட ஒற்றை ரூபாய்
பக்கம் இரண்டு என்ன சொல்ல
காசு தந்தாய் எண்ணி எண்ணி
பார்க்கிறேன்

அடி பேரழகே
உன்னை சேர்ந்திடவே
இந்த நாணயம் ஓர் சாட்சி
இருக்கும் உயிரும் உனக்கே
உபயம் எதற்கு ஆராய்ச்சி

இந்த நாணயத்தில்
உன்னை பார்த்திருப்பேன்
பிறர் பார்க்கவும் விட மாட்டேன்
கடவுள் வந்து கேட்டால் கூட
காணிக்கை இட மாட்டேன்
*(பல்லாங்குழியின் )*

படம் : ஆனந்தம்
பாடகர் : உன்னிகிருஷ்ணன், ஹரினி
இசை அமைப்பாளர் : எஸ்.எ. ராஜ்குமார்
பாடல் ஆசிரியர் : நா.முத்துக்குமார்





சு.கிருந்திகா
உளவியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்

# மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது உள நன்நிலை

உள நன்நிலை என்பது:
உள நன்நிலை என்பது ஒவ்வொரு தனியனதும் உள ஆரோக்கியத்தைக் குறிக்கின்றது. சாதாரணமாக ஒவ்வொரு தனியனும் தன் வாழ்நாட்களை சீரான முறையில் பேணிக் கொள்வதற்கு உடல் ஆரோக்கியத்தோடு உள ஆரோக்கியமும் இன்றியமை யாததாகும். இதன்படி, கற்றல் , கற்பித்தல் செயற்பாடுகள் திறம்பட நிகழ்வதற்கு ஆசிரியர்களதும் மாணவர்களதும் உள நன்நிலை மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது.

*உள நன்நிலை வரைவிலக்கணங்கள்:*

1. “உள நன்நிலை என்பது தம் வாழ்வில் ஏற்படும் அழுத்தங்களை அவர்களது சூழலுக்கு ஏற்ப எதிர்கொள்ளும் தன்மையாகும்”. (WHO)

2. “மக்கள் நேர்மறை உணர்வுகள் மற்றும் மகிழ்வான உணர்வுளை அனுபவிப்பதனால் தோற்றம் பெறுவதே உள நன்நிலை ஆகும்”. (Diener ,2000)

3. “தன்னாட்சி, சூழல் தேர்ச்சி, தனிப்பட்ட வளர்ச்சி, பிறருடனான நேர்மறை உணர்வுகள், வாழ்க்கை நோக்கம், மகிழ்வான உணர்வு ஆகிய ஆறு பரிமாணங்களால் ஆனதே உள நன்நிலை ஆகும்”. (Carol Ruff)

*மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது உள நன்நிலையை மேம்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்.*

பொதுவாகவே ஒவ்வொரு தனியன்களும் நபருக்கு நபர் வேறுபட்ட நடத்தைகளை வெளிப்படுத்துவதை நாம் அவதானிக்கின்றோம். சிலர் நல்ல ஆரோக்கியமானவர்களாகவும் பலராலும் விரும்பப்படும் நபர்களாகவும் காணப்படுவர். இதற்கு பிரதான காரணம் அவர்களது உள நன்நிலையானது பிறருடன்

ஒப்பிடுகையில் மேம்பட்ட நிலையில் காணப்படுகின்றமையே ஆகும். கீழ்க் குறிப்பிட்டுள்ள காரணிகள் மாணவர்களதும் ஆசிரியர்களதும் உள நன்நிலையை மேம்படுத்துவதில் பங்காற்றுகின்றன.

1. பரம்பரைக் காரணிகள்: பரம்பரை அலகுகள் வழியாக உயிரியல் சார்ந்து கடத்தப்படும் நேர்நிலையான ஆளுமைப்பண்புகள், அழகான ஆரோக்கியமான உடற்கட்டமைப்பு, பிறப்பிற்கு முன்னரான சீரான போசாக்கு முதலியவற்றை குறிப்பிடலாம்.

2. சிக்கல்களற்ற குடும்ப உறவுகள்: பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு இடையிலான சிறந்த தொடர்பாடல், புரிந்துணர்வு, அன்பு, ஒற்றுமை, விட்டுக் கொடுத்தல், ஒத்துணர்வு முதலிய பண்புகள் காணப்படுகின்ற குடும்ப பின்னணியானது மாணவர்களதும் ஆசிரியர்களதும் உள நன்நிலையை மேம்படுத்துவதில் பங்காற்றுகின்றன.

3. சிறந்த கல்விச் சூழல்: மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சாதகமானதும் பாதுகாப்பானதும் விருப்பத்துக்குரியதுமான



மனரம்மியமான முன்பள்ளிச் சூழல், பாடசாலைச் சூழல், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் வகுப்பறைச் சூழல் ஆகியன அவர்களது உள நன்நிலையின் மேம்பாட்டிற்கு உதவுகின்றன.

4. தேவைகளின் நிறைவு: அடிப்படைத் தேவைகளாகிய உணவு, நீர், வீடு, உடை முதலியனவும் அன்பு, பாதுகாப்பு, கணிப்பு ஐபிறரது கணிப்பும் சுய கணிப்பும்ஸ, சுகாதாரம் மற்றும் கற்றல் வாய்ப்புகள் முதலியன நிறைவேற்றப்படுகின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் எந்தவித சிக்கல்களும் இல்லாத காரணத்தால் சிறந்த உள நன்நிலையுடன் காணப்படுவர்.

இவற்றோடு சிறந்த உடல் ஆரோக்கியம், நல்ல நண்பர்களும் சக ஊழியர்களும், பொருளாதார வசதி, ஆன்மீக வழிகாட்டல், சமுதாயத்தில் நிலவும் அமைதியும் சமாதானமும், சமூக அமைப்புக்களது உதவிகள் முதலிய காரணிகளும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது உள நன்நிலையை மேம்படுத்துவதில் பங்காற்றுகின்றன.

### மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது உள நன்நிலையை பாதிப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது பிரதான செயற்பாடு கற்பதாகும். கற்றல் செயற்பாட்டில் இடர்கள் ஏற்படுகின்ற போது அதன்வழியாக மாணவர்களது உள நன்நிலை பாதிக்கப்படுகின்றது.

அத்தகைய காரணிகளாக பின்வருவன காணப்படுகின்றன.

1. பரம்பரைக் காரணிகள்: இதனுள் பரம்பரை வழியாக கடத்தப்படும் நோய் நிலைமைகள், உடற்குறைபாடுகள் மற்றும் ஆளுமைக் கோளாறுகள் முதலியவற்றை குறிப்பிடலாம்.

2. குடும்பக் காரணிகள்: குடும்ப வறுமை, பெற்றோரது அரவணைப்பின்மை, குடும்பத்தில் நிலவும் தீவிர ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் குழந்தைகளை மிகவும் செல்லமாக வளர்த்தல் முதலியவற்றை குறிப்பிடலாம்.

3. பாடசாலைச் சூழல்: பாடசாலைகளில் கட்டுப்பாடின்மை, மாணவர்களின் திறமைகளுக்கு அப்பாற்பட்ட வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்தல், பாடசாலையின் பௌதீகச் சூழலின் குறைபாடுகள். ஊ ம் : தூய்மையான மலசலகூடம் இன்மை, பாதுகாப்பான குடிநீர் வசதி இன்மை.

4. ஆசிரியர்களது தவறான நடத்தைகள்: ஆசிரியர்கள் மாணவர்களது குடும்ப பின்னணியை அறியாதிருத்தல், பின்தங்கிய சூழலில் இருந்து வரும் மாணவர்களை கவனத்தில் எடுக்காமை முதலியன மாணவர்களது உள நலனைப் பாதிக்கின்றன.

5. தேவைகள் நிறைவேற்றப்படாமை: மாணவர்களது அடிப்படைத் தேவைகளாகிய பசி, தாகம், தூக்கம், ஓய்வு, பாதுகாப்பு, அன்புத் தேவை முதலியன நிறைவேற்றப்படாத போது அவர்களது உள நன்நிலை பாதிக்கப்படுகின்றது.

இவற்றோடு மாணவர்கள் மத்தியில் காணப்படும் மூடப்பழக்கவழக்கங்கள், நவீன கற்றல் உபகரணங்களைப் பற்றிய அறிவின்மை, கற்க ஆயத்தப்படச் சிரமப்படல், பயிற்சியின்மை, தன்னம்பிக்கையின்மை, இலக்கு நிர்ணயிக்காமை, ஆர்வமின்மை மற்றும் உடல்நலக்குறைவு முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

மாணவர்களைப் போலவே ஆசிரியர்களது உளநன்நிலையும் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகின்றன.
1. குடும்பக் காரணிகள்: குடும்பத்தில் காணப்படும் அதிகரித்த வேலைகள், குடும்பத்தில் நிலவும் வன்முறைகள்.

2. பால்நிலை சார் காரணிகள்: முன்பள்ளிகளிலும் ஆசிரிய தொழில் ஆட்சேர்ப்பிலும் பெரும்பாண்மையாக பெண் ஆசிரியர்களே உள்வாங்கப்படல், சேவை மூப்பு அடிப்படையில் பெண் ஆசிரியர்களுக்கு பொறுப்பு வழங்கப்படும் போது ஆண் ஆசிரியர்கள் ஒத்துழையாத சந்தர்ப்பங்கள்.



3. அதிகரித்த மாணவர் எண்ணிக்கை: இதனால் தொடர் மதிப்பீட்டை வழங்குவதில் சிரமப்படல், பிறழ்வான நடத்தைகளுடைய மாணவர்களைக் கையாள்வதில் போதிய ஆதரவு கிடைக்காமை முதலிய சிக்கல்களால் ஆசிரியர்களது உள நன்நிலை பாதிக்கப்படுகின்றது.

4. வேலைச்சூழல்: வகுப்புக்களில் போதியளவு காற்றோட்டமின்மை, வெளிச்சமின்மை, இடவசதியின்மை, ஆளணி வசதிகளின் பற்றாக்குறை மற்றும் துணைச் சேவைகளின் போதாமை.

இவை தவிர ஆளிடைத் தொடர்பாடல் சிரமங்கள், பெற்றோர் மற்றும் சமூகத்தினரிடமிருந்து வரும் குழப்பத்தை ஏற்படுத்தும் கோரிக்கைகள், வேலைப்பளு, இடமாற்றம், குறைந்த ஊதியமும் தாழ்ந்த சமுதாய மதிப்பும், பிறபணிச்சுமைகள், உயர் அலுவலகர்களின் தேவையற்ற குறுக்கீடு மற்றும் பொருத்தமற்ற கலைத்திட்டம் முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

ஆசிரியர்களதும் மாணவர்களதும் உள நன்நிலை பாதிக்கப்படுவதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பின்னடைவு ஏற்படுகின்றது. அத்தோடு எதிர்காலத்தில் சிறந்த நற் பிரஜைகளை உருவாக்க முடியாத சூழ்நிலையும் ஏற்படுகின்றது. குறித்த பாதிப்புக்கள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படாதவிடத்து குறித்த தனியனில் மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வு ஏற்படுவதோடு சுற்றி இருப்பவர்களையும் ஒட்டுமொத்த பாடசாலைச் சூழலையும் பாதிக்கும். எனவே, இத்தகைய காரணிகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

## சாதனைப்பெண்



அமெரிக்காவின் கப்பற்படையில் மிக உயர்ந்ததாகவும், பெருமைக்குரியதாகவும் கருதப்படும் கப்பற்படை நடவடிக்கைகளின் தலைவர் (Chief of Naval Operations) பதவிக்கு இதுவரை அமெரிக்க வரலாற்றிலேயே இல்லாத ஒரு நிகழ்வாக லிஸா ஃப்ரான்செட்டி எனும் ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன்மூலம் லிஸா அமெரிக்க படைகளின் கூட்டு தலைவர்களில் (Joint Chiefs of Staffs) இடம் பெறும் முதல் பெண்மணியும் ஆகிறார்.

தற்போது அமெரிக்க கடற்படையின் துணைதலைவராக பணியாற்றும் லிஸா, தனது பணிக்காலத்தில் இதுவரை பல்வேறு சாதனைகளை புரிந்திருக்கிறார். அவரது சாதனைகளுக்காக, பெருமை வாய்ந்த 4 நட்சத்திர குறியீட்டை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வு அரசர்கள் போட்டியில் முதலாம் இடம் பெற்ற ஆய்வு

6

# மாணவர் மத்தியில் கோரோனாவின் தாக்கம்



தெ. வஜிதா

மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படாத பொழுதிலும் தடுப்பூசி குறித்த அச்ச உணவர்வுடையவர்களாக காணப்படுகின்றனர். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 89.1% ஆன மாணவர்கள் கொவிட் வைரஸ் தொற்றுக்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிந்திருப்பதாக கூறியிருப்பதுடன் அவர்களிம் பெற்றுக்கொள்ளபட்ட கருத்துக்களின் படி முக கவசம் அணிதல் , சுய பரிசோதனை செய்து கொள்ளல், பொது இடங்களுக்கு முக கவசம் அணிந்து செல்லல், கை கழுவுதல், இருமல், தடுமல் இருந்தால் வீட்டை விட்டு வெளியேறாது இருத்தல், காச்சல் இருப்பின் வைத்திய சாலைக்கு செல்லுதல், இடைவெளிகளை கடைப்பிடித்தல், கையுறைகளை அணிதல், சட்டதிட்டங்களை பின்பற்றுதல், சுய தனிமைப் படுத்திக்கொள்ளல் என்பவன பொதுவான தடுப்பு நடவடிக்கைகளாக குறிப்பிடிருக்க காணலாம். இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.



“பாடசாலையில் கடைப்பிடிக்கின்ற சுகாதாரம் சார் விதிமுறைகள் ஏனைய மாணவர்களால் கடைப்பிடிப்பதில்லை. இதனால் அவர்களும் தொற்றுக்குள்ளாகிற நிலை இருக்கிறது. தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான சரியான தெளிவின்மையாலும் எங்கட பெற்றோர்கள் அதையும் விரும்ப மாட்டினம். தற்போது ஏனைய வயதுப்பிரிவினருக்கு ஊசி போடப்பட்டாலும் மாணவர்கள்

மத்தியில தடுப்பூசி தொடர்பான அச்ச உணர்வு காணப்படுவதோட பெற்றோர்களிற்கும் அது தொடர்பான விளக்கமின்மையே பிரதானமான காரணமாகக் காணப்படுகுது." (விடய ஆய்வு-10)

எனவே மாணவர்கள் மத்தியிலான கொரோனா நோய்த்தொற்று தொடர்பிலான விழிப்புணர்வுசார் நடவடிக்கைகள் மற்றும் அறிவு, உளப்பாங்கு மற்றும் நடத்தையினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதன் ஊடாக இவ் பாரியளவிலான நோய்த் தொற்றிலிருந்து விடுபட்டுக் கொள்வதோடு எம்மையும் எமது சமூகத்தினையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

"கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்கள் மத்தியிலான கொரோனா பற்றிய அறிவு, உளப்பாங்கு, நடத்தை தொடர்பான ஓர் மதிப்பீடு" என்னும் ஆய்வினது கலந்துரையாடலானது, ஆய்வு வினாக்கள் மற்றும் ஆய்வின் பெறுபேறுகளை அடிப்படையாக கொண்டு, ஏற்கனவே மேற்கொள்ளபட்ட ஆய்வுகளான, Jagajeet. P.S, Anshuman.S, Etal- [2020] என்பவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளிலிருந்து மாணவர்களின் அறிவு, உளப்பாங்கு, நடத்தை என்பவற்றை தீர்மானிக்கும் காரணிகளாக சமூக ஊடகங்களின் செல்வாக்கு, சமூகக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள், நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், சுகாதார அலகுகள், முன்னணி தொழிலாளர்கள், சமூக தலைவர்கள் என்பவற்றை கூறுகின்றனர். 83 சதவீத மாணவர்கள் ஊடகங்களின் ஊடாக தரவுகளை மேற்கொள்வதாகவும் , 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மூலமும் 1/3 பங்கினர் சுகாதார அலகுகள் மூலமாகவும் தமக்கான கொரோனா வைரஸ் தொற்று குறித்த தரவுகளை பெற்றுக் கொண்டதாகக் கூறுகின்றனர்.

இதனைக் குறித்த ஆய்வு பிரதேசத்துடன் ஒப்பிட்டு பார்க்கின்ற போது நண்பர்கள், சமூக கட்டுப்பாட்டு செயற்பாடுகள், சுகாதார அலகுகள் என்பவற்றில் இருந்து கொரோனா வைரஸ் குறித்து தெரிந்து கொள்வதனை விட தமது பெற்றோர்கள் மற்றும் ஊடகங்களின் அடிப்படையாகவே அதிகளவு தரவுகளை மேற்கொள்கின்றனர். ஊரடங்கு சட்டங்கள் மேற்கொள்ளபடுகின்ற போதும் அது கொரோனாவின் பாதிப்பிற்குட்பட்ட இடங்களை மட்டும் முடக்குவதனால் ஏனைய பிரதேசத்தவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அதேவேளை அன்றைய நிலையில் ஊடகங்களின் ஊடாக கற்கை



நடவடிக்கைகள் இடம்பெறுவதனால் அதிகளவு மாணவர்கள் சமூக ஊடகங்களுடன் அதிகளவு தொடர்புபடுத்தப்படுகின்றனர். அத்துடன் இங்கு வாழும் மக்கள் விவசாயம் செய்கின்ற போதும் அதிகளவு மாணவர்களின் பெற்றோர்கள் நகரங்களிற்கும் வெளியிடங்களுக்கும் வேலைக்கு செல்வதனால் அவர்களுக்கு கொரோனா குறித்த புரிதல் ஏற்படுகின்றது. இதன்படி ஆய்வாளரின் கருத்துக்கள் குறித்த ஆய்வு பிரதேச கருத்துக்களுடன் ஒத்து போகின்றது.

Zhong.B.L, Luo.w, etal – [2020] என்பவர்களால் மேற் கொள்ளப்பட்டுள்ள ஆய்வு களிலிருந்து 40 சதவீதமானோர்களில் கொரோனா வைரஸ் குறித்த சிறந்த அறிவினைடக் கொண்டவர்களாகவும் 60 சதவீதமானவர்கள் குறித்த அளவான அறிவினைக் கொண்டதாகவும் காணப்பட்டனர். காய்ச்சல், இருமல், மூச்சுத்தினறல் மற்றும் சுவாச கஸ்டங்கள் Covid -19 இல் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை பற்றியும் 92 சதவீதத் தடுப்பு ஊசிகளின் கிடைப்பனவு குறித்தும் அறிந்திருந்தனர் எனக் கூறுகின்றார்.



இதனைக் குறித்த ஆய்வுப் பிரதேசத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் போது இணையவழிக் கற்கைக்காக சமூக வலைத்தளங்களை பாவிக்கின்ற மாணவர்கள் கொரோனா வைரஸ் பரவுதல் குறித்த அறிவினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டிருக்கின்ற அதேவேளை கிராமப் புறங்களில் ஊடகங்களின் தொடர்பு இன்றி இருக்கின்ற மாணவர்கள் Covid-19 குறித்த அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகக் காணப்படுகின்றன.

மேலும் குறித்த ஆய்வு பிரதேசத்தில் கொரோனா வைரஸின் தாக்கம் குறைவாகக் காணப்படுவதனால் கொரோனா வைரஸின் அறிகுறிகள் குறித்து விழிப்புணர்வு செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் இடம்பெறாத காரணங்களால் Covid-19 தொற்றும் வழிமுறைகள் குறித்தும் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகக் காணப்படுகின்றது. பாலினம், தொழில், வசிக்கும் இடம் என்பன Covid-19 குறித்து மாணவர்களின் அறிவை தீர்மானிப்பதாக காணப்படுகின்றன.

Hussein,R.N, Naquid A,I, etal [2020] என்பவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளிலிருந்து பாலினம், தொழில், வசிக்கும் இடம் என்பன Covid-19 குறித்து மாணவர்களின் அறிவை தீர்மானிப்பதாக காணப்படுகின்றன. ஆண்களும், பதின்மவயதினரும் Covid-19 தொற்றுக்கு முக்கிய காரணமாக அவர்களின் இளம்வயது

com - csp80159330

காணப்படுகின்றது எனக் கூறுகின்றார். இவ் ஆய்வாளரின் கருத்துக்களை குறித்த ஆய்வு பிரதேசத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஆய்வாளரின் கருத்துக்களுடன் குறித்த ஆய்வு பிரதேசத கருத்துக்களும் ஒத்து செல்வதனைக் காணலாம். குறித்த ஆய்வு பிரதேசத்தில் உள்ள அதிகளவு மாணவர்கள் கிராமப்புறங்களில் இருந்து வருவதனால் பெண்கள் அதிகளவு வீட்டை விட்டு வெளிச்செல்வதில்லை. அதேநேரம் ஆண் மாணவர்கள் சமூக வலைத்தளங்களுடனும் சமூகத்தவர்களுடனான அதிகளவு ஆர்வமுடையவர்களாக இருப்பதனால் கொரோனா வைரஸ் குறித்த அதிகளவான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

தொழில் என்று பார்க்கும்போது குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் மாணவர்களின் பெற்றோர் புரியும் தொழில்களின் அடிப்படையில் Covid-19 குறித்த தொழிலினை மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். அதேபோன்று நகரங்களில் வசிக்கும் மாணவர்கள் கிராமப்புறங்களில் வசிக்கும் மாணவர்களை விட கொரோனா வைரஸ் தொற்று குறித்த புரிதலினை அதிகளவு கொண்டுள்ளனர்.

மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படாத பொழுதிலும் தடுப்பூசி குறித்த அச்ச உணவர்வுடையவர்களாக காணப்படுகின்றனர். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 89.1% ஆன மாணவர்கள் கொவிட் வைரஸ் தொற்றுக்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிந்திருப்பதாக கூறியிருப்பதுடன் அவர்களிம் பெற்றுக்கொள்ளபட்ட கருத்துக்களின் படி முக கவசம் அணிதல் , சுய பரிசோதனை செய்து கொள்ளல், பொது இடங்களுக்கு முக கவசம் அணிந்து செல்லல், கை கழுவுதல், இருமல், தடுமல் இருந்தால் வீட்டை விட்டு வெளியேறாது இருத்தல், காச்சல் இருப்பின் வைத்திய சாலைக்கு செல்லுதல், இடைவெளிகளை கடைப்பிடித்தல், கையுறைகளை அணிதல், சட்டதிட்டங்களை பின்பற்றுதல், சுய தனிமைப்படுத்திக்கொள்ளல் என்பன பொதுவான தடுப்பு நடவடிக்கைகளாக குறிப்பிடிருக்க காணலாம். இவை போன்ற ஆய்வுகளின் பெறுபேறுகளும் இவ் ஆய்வின் பெறுபேறுகளுடன் எந்த வகையில் ஒத்ததாகக் காணப்படுகின்றது, எந்த வகையில் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது என்பது தொடர்பாகக் கலந்துரையாடுவதாக உள்ளது.

*ஆராய்வோம்...*



# நான்காம் கைத்தொழில் புரட்சிக்குள் நுழைந்துவிட்டதா உலகம் ?



வ. டியனி

1980களில் நாம் மிக ஆவலுடன் பார்த்து மகிழ்ந்திருந்த தொலைக்காட்சி நாடகத் தொடர் நைட்ரைடர் (Knight Rider) ஆகும். இதில் தோன்றும் கதாநாயகன் (மைக்கேல்), தானாக இயங்கும் காருடன் (கிட்) நிகழ்த்தும் சாதனைகளை நாம் வாய் பிளந்து பார்த்ததுண்டு. கிட் என்ற அந்த தன்னியக்க கார், கதாநாயகனுக்கு ஒரு பிரத்தியேக உதவியாளர் போன்றும் செயற்படும். இன்னொரு திரைப்படமொன்றில் கதாநாயகன் நடந்து கொண்டே சொல்லும் விடயங்களை மேசையில் உள்ள தட்டச்சு இயந்திரம் தானாக அவற்றை தட்டச்சு செய்து கொண்டிருக்கும். இவைபோன்ற பல விடயங்களை கடந்த கால திரைப்படங்களில், நாவல்களில், கற்பனை செய்திருப்பார்கள். இவற்றையெல்லாம் பார்த்தபோது, மாயாஜாலக் கதைகளாகவே நாம் அவற்றை கடந்து வந்திருந்தோம். இவையெல்லாம் நிஜத்தில் நடக்கின்ற காரியங்களா என எண்ணாமலும் இல்லை. எனினும், இன்று நிஜத்தில் தானாக இயங்கும் கார், பிரத்தியேக உதவியாளராக செயற்படக்கூடிய அலஸ்கா போன்ற டிஜிட்டல் உபகரணங்கள், உரையாடலை தன்னியக்கமாக டைப் செய்தல் போன்றன நாம் அன்றாடம் காணும் சாதாரண நிகழ்வுகளாகி வருகின்றன. உலகின் அசுர வளர்ச்சி கண்டுள்ள தொழினுட்பத்தின் காரணமாக இவை





சாத்தியமாகி வருகின்றன. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு, தன்னியக்க தொழினுட்பம் மற்றும் இயந்திர கற்றல் ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக மனிதர்கள் செய்யக் கூடிய விடயங்கள் பலவற்றை இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் செய்யத் தொடங்கியுள்ளதைக் காண முடிகிறது. இதுவே உலகின் நான்காம் கைத்தொழில் புரட்சி எனப்படுகிறது.

நான்காவது கைத்தொழில் புரட்சி என்பது பாரம்பரிய தொழில்களின் தொடர்ச்சியான மாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), தன்னியக்கம் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பைக் குறிக்கிறது. கைத்தொழில் வளர்ச்சியின் இந்த புதிய சகாப்தம் முந்தைய மூன்று கைத்தொழில் புரட்சிகளை அடிப்படையாகக் கொண்டது: முதலாவது, 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைமுறை உழைப்பிலிருந்து இயந்திரமயமாக்கலுக்கு மாறியது. இரண்டாவது, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாரியளவிலான உற்பத்தி முறைகளைக் கொண்டு வந்தது. மற்றும் மூன்றாவது, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கணினிகள் மற்றும் தன்னியக்கம் எனும் ஆட்டோமேஷனின் வருகையைக் கண்டுள்ளது. எனவே, நான்காம் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கு மிகு நுட்பங்களாக செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence), இயந்திர கற்றல் (Machine Learning) மற்றும் ஆட்டோமேஷன் (Automation) அல்லது தன்னியக்க தொழினுட்பம் ஆகியவற்றை குறிப்பிட்டுக் கூறலாம்.

செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence), இயந்திர கற்றல் (Machine learning) மற்றும் தன்னியக்க தொழினுட்பம் (Automation) ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய எண்ணக்கருக்கள் ஆகும். இவை எமது வாழ்க்கை முறைகளை மற்றும் வேலை செய்யும் முறைகளை விரைவாக மாற்றுகின்றன. இவை பெரும்பாலும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்பு கொண்டவையாகும். இவற்றை தனித்தனியாக எடுத்து நோக்கும் போது, ஒவ்வொன்றும் தனித்துவமான தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாடுகளைக் கொண்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு என்பது இயந்திரங்கள், குறிப்பாக கணினிமுறைமைகள் மூலம் மனித நுண்ணறிவு செயன்முறைகளை உருவகப்படுத்துவதாகும்.

அதாவது, கணணி முறைமைகள் மூலம், மனிதர்களின் செயற்பாடுகளையொத்த நடவடிக்கைகளில் இயந்திரங்கள், உபகரணங்களை செயற்படுத்தும் முறையினை இது குறித்து நிற்கிறது.



இது பொதுவாக மனித நுண்ணறிவு தேவைப்படும் பகுத்தறிவு, கற்றல் மற்றும் பிரச்சினைத் தீர்த்தல் போன்ற பணிகளைச் செய்யக்கூடிய இயந்திரங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. விதி-அடிப்படையிலான முறைமைகள் ( rule-based systems), இயற்கை மொழி செயலாக்கம் (natural language processing) மற்றும் கணணி நோக்கு (computer vision) ஆகிய நுட்பங்களை கொண்டு இது இயங்குவதாக உள்ளது. இயந்திர கற்றல் என்பது செயற்கை நுண்ணறிவின் உபகுழு ஆகும், இது வடிவங்களை அடையாளம் காணவும் தரவின் அடிப்படையில் எதிர்வு கூறல்களை உருவாக்கவும் பயிற்சி வழிமுறைகளை உள்ளடக்கியது. ஒரு மாதிரியுருவில் அதிகளவிலான அளவிலான தரவை இடுவதன் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. இத்தகைய மாதிரி உரு தரவுகளுக்கு இடையில் தொடர்புகளை அடையாளம் கண்டு வடிவங்களை உருவாக்கவும், அந்த வடிவங்களின் அடிப்படையில் எதிர்வு கூறல்களைச் செய்யவும் கற்றுக்கொள்கிறது. இத்தகைய மாதிரியுருக்களில் அதிகமதிகம் தரவுகளை இடுவதன் மூலம், மிகவும் துல்லியமான



மற்றும் அதி நவீன எதிர்வு கூறல்களைச் செய்ய முடியுமாக இருக்கும். தன்னியக்கமாக்கல் என்பது மீண்டும் மீண்டும் நிகழும் அல்லது சாதாரணமான பணிகளை தானியக்கமாக்குவதற்கு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இது உற்பத்தி செயன்முறைகள் முதல் வாடிக்கையாளர் சேவை தொடர்புகள் வரை அனைத்தையும் உள்ளடக்கிறது.

ரோபோக்கள், சாட்போட்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவின் பிற வடிவங்கள் உட்பட பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இத்தகைய ஆட்டோமேஷனை நிறைவேற்றலாம். இந்த மூன்று தொழில்நுட்பங்களின் கலவையானது பரந்த அளவிலான தொழில்கள் மற்றும் தொழில்களை மாற்றுகிறது. எடுத்துக்காட்டாக, மருத்துவத்துறையில், செயற்கை நுண்ணறிவுடன் இயங்கும் கண்டறியும் கருவிகள் மருத்துவர்களுக்கு மிகவும் துல்லியமான நோயறிதல்களைச் செய்வதற்கும் மிகவும் பயனுள்ள சிகிச்சைத் திட்டங்களை உருவாக்குவதற்கும் உதவுகின்றன. நிதித்துறையில், இயந்திர கற்றல் வழிமுறைகள், பரந்த அளவிலான தரவுகளை பகுப்பாய்வு செய்யவும், முதலீட்டாளர்கள் அதிக தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும் வடிவங்களை அடையாளம் காணவும் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தியில், தானியங்கு தொழில்நுட்பங்கள் உற்பத்தி செயன்முறைகளை ஒழுங்குபடுத்தவும்

மனித உழைப்பின் தேவையை குறைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. போக்குவரத்தில், சுயமாக ஓட்டும் கார்கள் மற்றும் டிரக்குகள் உலகெங்கிலும் உள்ள பொருட்களையும் மக்களையும் நகர்த்துவதில் புரட்சியை ஏற்படுத்த தயாராக உள்ளன.

இருப்பினும், எந்தவொரு புதிய தொழில்நுட்பத்தையும் போலவே, AI,ML மற்றும் தன்னியக்க தொழினுட்பம் தொடர்புடைய அபாயங்கள் மற்றும் சவால்களும் உள்ளன. குறிப்பாக இவற்றின் அசுர வளர்ச்சி மனித வேலைவாய்ப்புக்களில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் ஆகும். இவை, மனிதர்களின் சம்பிரதாயபூர்வமான வேலைகளை குறைக்கச் செய்வதுடன். பல புதிய வேலைவாய்ப்புகளுக்கான தேவைகளையும் உருவாக்குகின்றன. அதேபோன்று, மனித அழிவுகளுக்கு இட்டு செல்லும் வழிகளிலும் இந்த தொழில்நுட்பங்களை மனிதர்கள் பயன்படுத்தும் அபாயமும் இல்லாமலில்லை.

இந்த அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கும், AI, ML மற்றும் தன்னியக்க தொழினுட்பம் ஆகியவை சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் வழிகளில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், முறையான ஒழுக்கநெறி முறை வழிகாட்டுதல்களை உருவாக்கி நடைமுறைப் படுத்த வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன. இதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள், அத்துடன் இந்த தொழில்நுட்பங்களின் பொறுப்பான மேம்பாடு போன்றவற்றுக்கான வழிகாட்டுதல்களும் இருக்க வேண்டும்.

முடிவில், செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் மற்றும் தன்னியக்க தொழினுட்பம் ஆகியவை நாம் வாழும் மற்றும் வேலைசெய்யும் முறையை மாற்றியமைக்கின்றன. இவை சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை கொண்டு வரமுடியும். எனினும், இத்தொழில்நுட்பங்களை எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் அணுகுவது முக்கியம், அவை பாதுகாப்பான, நெறிமுறை மற்றும் அனைவருக்கும் நன்மை பயக்கும் வழிகளில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

*******





58

காவ்யமோகன்

# சித்திராங்கதா

## ஓலையரம் பெட்டியரம்

“மகிழாந்தகா.. விரைந்து சொல்.. தஞ்சை வீரர் நலமுடன் உள்ளார் என்ற நற்செய்தியை அவையோர் கேட்க உரத்துச் சொல்...”

“வேந்தே.. நடந்த உண்மை கூறுகிறேன்.. பொறுமை பேணுங்கள்..”

அவையோர் அனைவரும் மகிழாந்தகன் சொற்களுக்காய் விழிமூடாது காத்திருந்தனர். எல்லோரையும் சுற்றிப்பார்த்தவாறே மகிழாந்தகன் பேசத் தொடங்கினான்.

“அரசே.. நம் சுதேசிகள் வருணகுலத்தானை மறைந்திருந்து தாக்க ஒரு திட்டம் வகுத்திருந்தனர். ஒலிவேராவின் பறங்கிப் படை தஞ்சை வீரரின் வீரத்தில் கதிகலங்கி நின்ற வேளையிலே நம்படையில் சில சுதேசிகளால் இப்படியொரு துரோகம் வருணகுலத்தானிற்கு எதிராக இழைக்க திட்டம் தீட்டப்பட்டிருந்தது. ஆனால் நல்லை வீரமாகாளி எம்முடன் உள்ளாள் என்பதை மீண்டும் உணர்த்திவிட்டாள்.

மறைமுகமாக தாக்க வந்தவனை தடுத்து நிறுத்தி வருணகுலத்தானை காத்தருளியது வேறுயாருமில்லை அரசே. மிக்கபிள்ளை ஆராச்சிதான்.. ஆம் அரசே! யார்மீது ஐயங் கொண்டிருந்தோமோ அந்த மிக்கபிள்ளை ஆராச்சிதான் அவ்விடம் தக்க செயல் ஆற்றி தஞ்சை வீரரை எந்த ஆபத்தும் நெருங்காமல் காத்துள்ளான். வேல் கொண்டு தாக்க வந்த சுதேச வீரனை தன் கரத்தினாலே தடுத்து கணத்திலேயே அவன் உயிரை பறித்துள்ளான் மிக்கபிள்ளை”

நல்லை அரசவையில் அந்தச் செய்தியின் எதிரொலிப்பு அங்கு கூடியிருந்த அத்தனை பேரின் உள்ளத்தையும் நிம்மதியில் நிரப்பியது.

“அன்னை வீரமாகாளியே! உன் மக்களை நீ கைவிடப் போவதில்லை என்பதை நிரூபித்து விட்டாய் தாயே!

தஞ்சைவீரர் காக்கப்பட்டார் என்பது எமக்கு வெறுஞ் செய்தியல்ல. இந்த நல்லை மண்ணின் பிரார்த்தனையை நீ நிறைவேற்றிவிட்ட சாட்சியாகும் தாயே... அவையோரே! தஞ்சை வீரரிற்கு எதுவும் ஆகவில்லை... அவர் நலமுடன் உள்ளார். ஆம்! நலமுடன் உள்ளார்.."

சங்கிலிய மகாராஜா களிப்பு மிகுதியில் அவையோரை நோக்கி உரத்த குரலில் சொல்லிக்கொண்டிருந்தார்.

அரசி மஞ்சரிதேவி, மாருதவல்லி தொட்டு அவையிலிருந்த எல்லோரும் கைகூப்பி வீரமாகாளி தேவிக்கு மனதால் நன்றி சொல்லி நின்றனர். தரையில் விழுந்து கிடந்த சித்திராங்கதாவில் மட்டும் அந்தச் செய்தி எந்த அசைவையும் உண்டாக்க வில்லை. அவள் தலை குனிந்தே இருந்தது.

"அப்படியாயின்.. களத்தில் தஞ்சைவீரர் இல்லாமல் போனது ஏன் சேனாதிபதி?"

இன்னும் நம்ப மறுக்கும் தொனியில்



கேட்டார் இராஜமந்திரியார்.

"ஆம் .. நேற்றுவரை களத்தில் தஞ்சைவீரர் இருக்கவில்லைதான். மறைமுகமாக தஞ்சைவீரர் தாக்கப்பட்டு இறந்துவிட்டதாய் பரவிய செய்தி உண்மை என்றே பறங்கியரும் நம்பத் தொடங்கிவிட்டனர். அதையே சாதகமாக்கி தலைமறைவாகி வியூகம் வகுத்தார் தஞ்சை வீரர்.

ஆயுதபலம் கூடிய எதிரியை குறைந்த படையோடு திடீரெனத் தாக்கும் கரந்தடித்தாக்குதலை எம்மண்ணில் தஞ்சைவீரர் தொடக்கி வைத்துள்ளார்.

இன்று அவர் திடீரென களம்புகுந்து நிகழ்த்திய தாக்குதல் பறங்கியர் கண்களை நிலைகுலையச் செய்து விட்டது. சற்றும் எதிர்பாராத தாக்குதலால் பறங்கிப்படை நிதானம் தவறியது. நமக்கான வெற்றியை மேலும் உறுதிசெய்யவே தஞ்சைவீரர் தகவல் ஏதும் கூறாது தலைமறைவானதாக தங்களிடம் உடன் தெரிவிக்கச் சொன்னார். அதற்காகவே களத்தில் என்னை நிற்க அனுமதியாது உடன் கோட்டைக்கு விரையுமாறு அனுப்பி வைத்தார் தஞ்சைவீரர். அவரை நேரில் கண்டே உண்மை அறிந்து வருகிறேன். இனி தஞ்சை வீரர் நலன் குறித்து எந்த ஐயமும் வேண்டியதில்லை இராஜமந்திரியாரே.."

"மகிழ்ந்தோம் சேனாதிபதி.. தஞ்சைவீரர் மீது கொண்டிருந்த நம்பிக்கை விஸ்வரூபமெடுத்து விரிகிறது இப்போது. நல்லை தேசம்

எக்காலத்திலோ செய்த புண்ணியம் தான் இன்று இப்படியொரு வீரர் நம்முடன் துணையுள்ளார். எல்லாவற்றையும் அந்த வீரமாகாளி நன்றாகவே நடத்துகிறாள்.” வெற்றி நமக்கே...”

இராஜமந்திரியார் கோசம் அரண்மனை சுவர்களிலெல்லாம் ஆவேசமாக பட்டுத் தெறித்தது.

மகிழாந்தகன் அரசரை நோக்கி ஏதோ ஒரு விடயம் சொல்ல எத்தணித்தான்.

“அரசே..நாம் எல்லோரும் செய்த புண்ணியம் தஞ்சைவீரர் வந்து எம்மைக் காப்பது என்றால் அத்தகைய வீரருக்கு நாம் இழைக்கும் பாவத்தை பற்றி நிச்சயம் சிந்திக்க வேண்டுமல்லவா வேந்தே..”

“என்ன சொல்கிறாய் மகிழாந்தகா? புரியவில்லை”

“இதோ.. சிறை விலங்குகள் பூட்டப்பட்டு இந்தப் பெருஞ்சபையில் கைதியாய் கிடக்கின்றாளே தஞ்சை வீரரது ஆசைநாயகி.. இவளைப்பற்றித் தான் கூறுகிறேன் வேந்தே.. இதுவா தஞ்சை வீரருக்கு நாம் செய்யும் கைம்மாறு.. என் பேச்சில் தவறிருந்தால் மன்னியுங்கள் வேந்தே.. ஆனால் இதை கூறாமல் என்னால் இருக்கமுடியவில்லை. எதுவும் கூறாமல் இருப்பதே தவறென்று உணர்கிறேன் இத்தருணம்.”

மன்னர் பேசவில்லை.. பதிலாக இராஜமந்திரியார் பேசினார்.

“மகிழாந்தகா.. இவளை சாதரண பெண் என்று நினைந்து நீ வருந்திகிறாய். ஆனால் இவள் இட்ட ஆரம்பமே எல்லாவற்றையும் இன்று ஆபத்திற்கு அழைத்து வந்திருக்கிறது. தஞ்சைவீரருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் அது இவளால் மட்டுமே என்பதையறிந்தும் இவளை தண்டிக்காமல் விடுவது எப்படி சேனாதிபதி?”

“இராஜமந்திரியாரே.. தங்களைப்போல் அறிவாற்றல் எனக்கில்லை. ஆனால் தஞ்சைவீரரின் உள்ளத்தை பற்றி மட்டும் தாங்கள் அறியவில்லையா? மிக்கபிள்ளை ஆராச்சி மீது நமெல்லோரும் நம்பிக்கையற்று இருக்கையில் தஞ்சைவீரர் தானே அவன் வீரத்தையும் நோக்கத்தையும் முழுதாய் நம்பினார். இன்று நிகழ்ந்ததை பார்த்தீர்களா? மிக்கபிள்ளையினால் தானே நம் தஞ்சைவீரர் காக்கப்பட்டுள்ளார். நம் தேசத்திற்கு வர இருந்த பெருங்களங்கம் அவனால் தானே அகன்றிருக்கிறது. தஞ்சைவீரரின் மதி நுட்பத்திற்கு இதைவிடவா சான்று வேண்டும்? தஞ்சைவீரர் சித்திராங்கதாவின் மாயவலையிலோ சதிவேலையிலோ விழுந்து கிடக்கும் சாதாரணர் அல்ல. அவர் சித்திராங்கதாவை ஆதர்சமாக நேசிக்கின்ற பெருவீரர். அவர் எந்த மடத்தனமும் அப்படி ஆற்றமாட்டார். தாங்கள் இங்ஙனம் ஆற்றுவதை அறிந்தால்தான் அவர் மனம் வேதனை கொள்ளும்.

அரசே! தங்களை வேதனைப்படுத்த இதனை அவையில் நான்

கூறவில்லை. இவ்விடம் இதைக் கூறுவதற்கு காரணம் என்னிடம் இருக்கிறது. தஞ்சைவீரர் என்னிடம் சொன்னவைகளை கொண்டே கூறுகிறேன். எந்தக்குற்றமும் செய்யாதவள் இந்த ஆடலரசி. இவளை இங்ஙனம் நாம் துன்புறுத்துவது தஞ்சைவீரருக்கு நாம் செய்கிற அவமரியாதை போலாகும். ஆம் வேந்தே! அதை நிரூபிக்க தஞ்சைவீரர் தங்களிடம் இரகசியாய் வழங்குமாறு என்னிடம் தந்த ஓலையை இந்த அவையிலேயே உங்களிடம் ஒப்படைக்கிறேன். இந்த அவை உண்மையறிய வேண்டும். மேலும் இதோ இந்தப் பெட்டியை சித்திராங்கதாவிற்காய் வருணகுலத்தார் வழங்கினார். ஆடலரசி அவையில் இருப்பது பற்றி தஞ்சைவீரர் அறிந்திருக்க மாட்டார்."

அந்தப்பெட்டியை மகிழாந்தகனுடன் வந்த தஞ்சைப்படைவீரன் ஒருவன் சித்திராங்கதாவின் அருகில் கொண்டு போய் வைத்தான்.

ஓலையை வாசிக்கும்படி ஆணையிட்டார் அரசர். ஓலையை திறந்து வாசிக்க ஆரம்பித்தான் அந்த வீரன்.

தொடரும்....

# இந்தியாவுக்கு திரும்பும் கலைப்பொருட்கள்

இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட சாமி சிலைகள் உள்ளிட்ட பழங்கால கலைப்பொருட்களை மீட்டு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. இந்த நிலையில் 105 பழங்கால கலைப்பொருட்களை அமெரிக்கா இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது.

இதில் கிழக்கு இந்தியாவில் இருந்து 47 கலைப்பொருட்கள், தென்னிந்தியாவில் இருந்து 27 பழங்கால பொருட்கள், மத்திய இந்தியாவில் இருந்து 22 கலைப்பொருட்கள், வட இந்தியாவில் இருந்து 6 பொருட்கள் மற்றும் மேற்கு இந்தியாவில் இருந்து 3 கலைப்பொருட்கள் அடங்கும். சுமார் 50 கலைப்பொருட்கள் இந்து, ஜெயின் மற்றும் இஸ்லாம் மதத்துடன் தொடர்புடைவை என்றும் மீதம் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை குறிக்கும் வகையிலானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# கிரிக்கெட் உலகக்கிண்ணம் 2023

## [மைதானங்கள் ஒரு பார்வை]

எஸ்.எஸ்.நுஜன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)


### *(6) ஈடன் கார்டன் மைதானம் – கொல்கத்தா*

1996 உலகக் கிண்ண இலங்கை-இந்திய அரையிறுதியில் நடைபெற்ற வெட்கக்கேடான நிகழ்வால் ஆட்டம் நிறுத்தப்பட்டது அனைவரும் அறிந்ததே. இருந்தும் இந்த மைதானம், பெரும்பாலான சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு புனித யாத்திரையாக மாறியுள்ளது, விளையாட்டில் மிகவும் ஆர்வமுள்ள மற்றும் குரல் கொடுக்கும் ரசிகர்களுக்கு முன்னால் தங்கள் திறமைகளை காட்ட இது ஒரு வாய்ப்பு ஆகும். இம்முறையும் இந்த மைதானத்தில் தான் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. 2011 உலகக் கிண்ணத் தொடருக்காக மீள் உருவாக்கப்பட்டது. ஆனால் இவ் வேலைகள் நிறைவடையாமையால் இந்திய இங்கிலாந்து இடையேயான போட்டி மாற்றப்பட்டிருந்தது. ஆனால் இம்முறை இந்திய - தென்னாப்பிரிக்கா மற்றும் பாகிஸ்தான் - இங்கிலாந்து இடையேயான போட்டிகள் உட்பட்ட நான்கு குழுநிலை ஆட்டங்கள் இங்கு நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.



### (7) வான்கடே மைதானம் – மும்பை

உலகக் கிண்ணத் தொடரின் இறுதி போட்டியை நடாத்திய இந்த மைதானத்தில் இம்முறை முதலாவது அரையிறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. அத்துடன் இலங்கை இந்தியா இடையேயான போட்டி உட்பட நான்கு குழுநிலை ஆட்டங்கள் இங்கு நடைபெறும். வான்கடே ஸ்டேடியத்தின் அமைவு கடலோர இடம் என்பதால், கடல் காற்று வீசும் போது ஸ்விங் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமான உதவி கிடைத்தது. இருப்பினும், 2011 உலகக் கோப்பைக்கு முன்னதாக ஸ்டாண்டுகள் மீண்டும் கட்டப்பட்ட போது, இந்த விளைவுகள் ஓரளவு குறைக்கப்பட்டது. ஆடுகளம் பாரம்பரியமாக ஓட்டங்கள் குவிப்பால் நிரம்பியது, ஆனாலும் சிவப்பு மண் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சில உதவிகள் இருப்பதை உறுதி செய்யும். மும்பை கிரிக்கெட் வீரர்களான விஜய் மெர்ச்சன்ட், சுனில் கவாஸ்கர் மற்றும் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரின்



பெயரால் வான்கடே மைதானத்தில் ஸ்டாண்டுகள் உள்ளன.

### (8) அருண் ஜேட்லி ஸ்டேடியம் – டெல்லி

இந்திய தலைநகரில் இருக்கும் இந்த மைதானத்தில் ஐந்து போட்டிகள் நடைபெறவுள்ளன. ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை தலா இரு போட்டிகளை இங்கு ஆடுகின்றன. சுழற்பந்து வீச்சாளர்களில் தங்கியிருக்கும் இந்த இரு அணிகளுக்கும் சாதகமாக அமையலாம்.



### (9) எம். ஏ. சிதம்பரம் ஸ்டேடியம் – சென்னை

1916 ஆம் ஆண்டு பிரசிடென்சி போட்டிகள் தொடங்கியதில் இருந்து தமிழ் நாடு மாநிலத்தில், கிரிக்கெட்டின் ஆன்மீக இல்லமாக விளங்குகிறது. இதன் போட்டித் தன்மையான ஆடுகளங்களுக்கு பெயர் பெற்றது. பொதுவாக சேப்பாக்கம் என்று அழைக்கப்படுகிறது. சேப்பாக்கத்தில் தனித்துவமானது என்னவென்றால், நாட்டிலேயே மிகவும் அறிவார்ந்த மற்றும் பாராட்டக் கூடிய ரசிகர் கூட்டமும் சூழ்நிலையும் ஆகும்.

1997ல் நடந்த சுதந்திரக் கோப்பைப் போட்டியில் சயீத் அன்வார், இந்தியாவுக்கு எதிராக 194 ரன்கள் எடுத்து சாதனை படைத்த போதும், 1999ல் பாகிஸ்தான் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற போதும் அங்கிருந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தபோது இது நிரூபணமானது. இங்கு ஐந்து போட்டிகள் நடைபெறுகின்றன, இதில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா மோதிக்கொள்ளும் ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் போட்டியாகவுள்ளது.



*(10) நரேந்திர மோடி ஸ்டேடியம் – அகமதாபாத்*

ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் கண்டு களிக்க கூடிய உலகின் பெரிய கிரிக்கெட் ஸ்டேடியம் ஆக மிளிர்கின்ற இந்த மைதானத்தில் உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது போட்டி (இங்கிலாந்து - நியூசிலாந்து), பரமவைதிரிகளுக்கிடையேயான போட்டி (இந்தியா - பாகிஸ்தான்), ஆஷஸ் வைதிரிகளுக்கிடையேயான போட்டி (அவுஸ்திரேலியா - இங்கிலாந்து) மற்றும் இறுதிப்



போட்டி என இவ் உலக கிண்ண தொடரின் பல முக்கியமான ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. இந்த மைதானத்தின் இருமுனைகளான அதானி பவிலியன் மற்றும் ஜியோ, இந்தியாவின் இரு பெரும் வணிகர்களை குறிக்கிறது.

ICC MEN'S CRICKET WORLD CUP
INDIA 2023